௳

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு உ௮	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, பங்குனி ஏப்ரல், 1954	பரல் ௮

உடையப்பா பிரிவு

மனவுலகத்து மன்னுதல் குறிக்கும் நாட்கள் சில. மன்னா ஆண்டுகள் பல. இவ்வாண்டு அறிஞருலகுக்கும் நாட்டுக்கும் பேரதிர்ச்சியை—புன்கண்ணை நிறுத்திய—பல நல்லோரை விழுங்கிய—பொல்லாத புல்லாண்டாகும்.

பாகனேரி சி. உ. சுப. உடையப்பா அவர்கள் இவ் விசய யாண்டு மாசித்திங்கள் உ௮ (11-3-54) ஆம் நாள் மாலை ஏழு மணிக் கால எல்லையில் தம் இல்லத்தில் உளதாகும் புகழுடல் பெற்றார்கள்.

அன்று, அவர் இல்லமும் பாகனேரி நகரும் ஒளி மழுங்கித் தோன்றிற்று. அறிஞர்கள், செல்வர்கள், தேசியத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், ஏழை எளியவர், அஞ்சல் வானொலி நிலையங்கள் முதலிய யாவரும் வாய்விட்டுக் கதறினர், சென்னைச் சட்டசபை, நாட்டாண்மை, நகராண்மைக் கழகங்கள், ஆசிரியப் பெருமக்கள், நெல்லை, சென்னைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகச் செயலகத்தினர் யாவரும் கண்ணீர் மல்கி வடியக் கலுழ்ந்தனர். இக் கழகம் தன் அலுவலை நிறுத்திற்று; சட்ட அவைமன்றம் கூடி வருந்திக் கலைந்தது.

பாண்டி நாட்டையே தன் நாடாகக்கொண்ட நம் தமிழன்னை தன் அரும்பெறற் புதல்வனை இழந்து அலமந்தாள்; தமிழ்நாடு, இந்திய தேயம் ஓர் தொண்டரைத் தலைவரை இழந்தன! அவர் தோன்றிய பெருங்குலம் புகழ்மகனைப் பறிகொடுத்தது! அவர் இல்லம் தலைவன் ஒருவனைத் தணந்து கொதித்தது!

உடையப்பா அவர்கள் அரசியல்வானில் ஞாயிறாகத் திகழ்ந்தவர். அஞ் ஞாயிறு இன்று காலவேக மேகத்தால் மறைப்

புண்டது. வேற்றுமையில்லா விழுத்திணைப் பிறந்து வீற்றிருந் தவா, நம உடையபபா! உரையும் பாட்டும் உடையவர் நம் உடையபபா! புலவா பாடும் புகழுடையார் நம் உடையப்பா! இன்று வலவன் ஏவா வானவூர்தியில் மேலுல கெய்தினர் உடையபபா! வாகை சூடிய உடையபபா இனறு வஞ்சி சூடினர். அந்தோ! இன்ன தம்ம இவ் வுலகம்! 'நெருநல உளன்ஒருவன் இன்றில்லை யென்னும் பெருமை உடைததிவ் வுலகு' என்று பேசினர் பெருநாவலா! அதற்கு இலக்காக உடையப்பா மறைந்தார். நண்பாகள் இங்கே கண்டேம; அங்கே இருந்தார்; உங்கே விருநதுண்டார் எனக, கூறிக கூறிக் கதறினா! பதறி னர்! விழுநதனா! எழுந்தனராய் ஏமம் எய்தினா

உடையப்பா உளளம, உளளுவதெலலாம உயர்வுள்ளும் பெற்றியது அவா சீரியா, நேரியா, நடுநிலையாளா, பொய்யா மையை மெய்யணியாகப் பூண்டவா அவாபால, தமிழர்க் கென அமைந்த பண்புகளான, நகை, ஈகை, இன்சொல், இகழாமை என்னும நறகுடிமைப பண்புகளும, அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊககம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை எனனும் அரசாக்கென அமைநத அருஙகுணஙகளும இயறகையாவே அமைநதிருந்தன. அறனறிநது மூதத அறிவுடையாா கேண்மையும, நவில்தொறும் நூலநயம் ஒத்த நல்லார் குழுவும எககாலும சூழ, பன்மீன் நடுவட பானமதிபோல இலகி யொளிாநதனா.

இவாதம பிரிவு, நம தேயததுக்கு, தமிழ் நாட்டுக்கு— பாகனேரி நகருக்கு—அவ்வூர் ஏழைமக்கள செலவத் தோன்றல் களுக்கு ஈடு எடுப்பற்ற பேரிழப்பே யாகும.

இவரை இளம்பருவ காலத்தே முற்றா முதிரா அமையத்தே இழந்து அலமரும் அவர்தம மனைவி மக்கட்கும் விருபபுறு சுற்றத்தவர்கட்கும எம ஆழ்நத வருத்தத்தை உள்ளம உருகித் தெரிவிததுக் கொள்ளுகின்றோம் அவர்தம் ஆருயிர் இறை திருவடி இனபில் திளைததின்புறுவதாக.

நாடும் நகரும்

இராமநாதபுர மாவட்டத்தில் பாகனேரி எனப் பெயரிய நகரும் ஒன்று. இந் நகர் நிலந்தரு திருவும் கலந்தரு திருவும் ஈட்டும் நசைமேழி உழவரும், தமவும பிறவும் ஒப்பநாடும் வணிகப் பெருமக்களும், கண்ணுள் வினைஞர் முதற் பல்வகைக் கைத் தொழில்வினைஞர்களும் கலநதிருந்துறையும் கடியுடை வியனகர்.

குடிமை

இவ்வூரில், கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி வாளோடு மூத்த வீரக்குலமாகிய கள்ளர் மரபு களின்

பெறத் திகழ்வது, அக் குலத்தில் பண்டைக் காலத்தே சிக்கன் என்பார் சிறப்பும் செல்வமும் அறப்பண்பும் மிகத் திகழ்ந்தனர். அவர்தம் வழி, வாழையடி வாழையாக வளர்ந்து வரலாயிற்று. அக் குடிக்குச் சிக்கன் புறம் என்னும் சிறப்புப் பெயர் வழக்காக வளர்ந்து வரலாயிற்று.

தந்தை தாயர்

அவர் குடிமை சிறப்ப ஒப்பில் ஒருவரெனத் தக்க 'சுப்பிர மணியன்' என்பார் தோன்றினார். அன்னார் கல்வி அறிவு ஒழுக்க மிக்காராய்க் கடவுட் பேரன்புடையராய் விளங்கி, 'இடனின்றி இரந்தார்க் கொன்றீயாமை இழிபு' என்னும் கருத்துடைய ராய்ச் செல்வம் ஈட்ட இலங்கை சென்று அத் துறையில் பொருள்வளம் காண முயன்றார். அவர்க்கு மணப்பருவம் எய்துற அவ்வூரில் மாண்புமிக்க ஒத்த கிழமைபெற்ற குலத்தைச் சார்ந்த 'உடையம்மை' என்னும் உயர் பண்புமிக்க அம்மை யாரை இல்லறக் கிழத்தியாராக மணம் புரிந்தனர்.

காலம் பல சென்றன; இவர்தம் இல்லறக்கடமை செம்மை பெற இன்பத்தோடு வாழ்ந்தனர் ஆனால், 'இன்னடிசில் புக் களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய் மக்கள்' இல்லாது பன்னாள் மாழ்குற்றனர், முந்தித் தவம்பல செய்தனர்; இறை வழிபாடியற்றினர், உண்ணா நோன்பு உற்றனர்; இவை ஓர் பெண் மகவைத் தந்தன அம்மகவுக்குப் 'பலமுடிச்சி' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர் சில்லாண்டு மகண்மையன்பில் பெற்றோர் மூழ்கி மகிழ்வுற்றனர். பின் மகவு தோன்றிற்றில்லை.

பில்லப்பர் பிறப்பு

அப்பால் உடையம்மை அம்மையாரின் தங்கையாகிய 'பழனியாயி' என்னும் நங்கையாரை இரண்டாம் மனைவியாராக மணந்தனர். அவர்க்கும் தவம்பல ஆற்றி அவ்வூர்ப் புல்வாய் நாயகியம்மை திருவருளால் 'கருங்கதிர் விரிக்குமேனிக் காமரு குழவி'யாக ஓர் ஆண்மகவு பிறந்தது. அம்மகவுக்கு அம்மை அருளால் பிறந்த காரணத்தால் 'பில்லப்பன்' எனப் பெய ரணிந்து மகிழ்ந்தனர். அம்மகிழ்வில் திளைத்து வாழ்ந்தனர். குழந்தைக்கு அகவை நான்காயிற்று.

உடையப்பர் தோற்றம்

திசைய னைத்தின் பெருமை யெல்லாம்
தென்றிசையே வென்றேற
'வண்டமிழ் செய்தவம் நிரம்ப'

தாய்மை யன்புமிக்க வாய்மையுடைய உடையம்மை மணி வயிற்றில் பலமுடிச்சிக்குப்பின் தம்பியராக—பில்லப்பாவின்

பிற்பிறந்த நம்பியாக சுபகிருது ஆண்டு மார்கழித்திங்கள் உக (4-1-1903) ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நன்னாளில் உடைப்பா அவர்கள் பிறந்தனர்.

இம்மூன்று மக்களையும் தாய் தந்தையர் மிடியன் ஒரு செய்யாளன அச்செய் விளையக்காக்குஞ் செயல்போல, முற்கால மாணவர் பாடம் போற்றிப் படிக்குந் தன்மைபோலத் தாம் தவஞ்செய்தீன்ற மக்கள் மூவரையும் போற்றி வளர்த்தனர். அப்பால் தந்தையார் மண்ணுலகை மக்கட்களித்து விண்ணுலகுற்றனர்.

பின்னர்த் தாய்மாரிருவரும் தம் மக்களைப் பேணிவளர்க்க மக்கள் மணப்பருவமெய்தினர். ஆண்மக்கள் இருவரும் அக்காலக் கல்வி முறைப்படி ஏட்டுக்கல்வி கற்று எழுத்தறியும் திறனுக—கணிதமுறையில் வல்லுநராக இலகினர்.

திருமணமும் மக்கட்பேறும்

பாகனேரிக்குத் தென்மேற்குத் திசையில் காளையார்மங்கலம் எனப் பெயரிய ஊரில் வைரப்பன் அம்பலம் என்பார் பெருஞ்செல்வர். அவர்க்குச் செல்வப்புதல்வர் சிதம்பர அம்பலம் என்பார், இவர் தோற்றத்தாலும் நடைஉடைச் சிறப்பாலும் கண்கவர் வனப்பினர். அவர்தம் அருந்தவப் புதல்வியார் திருவனைய அரிய நல்லார் 'சிகப்பி' எனனும் திருப்பெயரினர். இவரை நாடெல்லாம் மதிக்கவரு நலனுடையப்பருக்கு மனைத்தக்க மாண்புடை மனைவியாகப் பிங்கள ஆண்டு தைத்திங்கள் க௮-ஆம் நாள் மணமுடிப்பித்தனர் இவ்வம்மையார் கற்புக்கடம்பூண்ட பொற்றொடியார், வருவிருந்தூவப்ப ஊட்டும் திருவினர், கொண்கன் நினைப்பறிந்தொழுகும் நீரர். இவர்க்குக் கான்முளையாக இருவகை மக்களும் தோன்றினர். அவர்களுள் ஆண்மக்கள் நால்வரும் பெண்மக்கள் இருவரும் நலத்துடன் வாழ்கின்றனர். இவர் முறையே (க) சுப்பிரமணியன், (உ) பில்லப்பன், (௩) இராசேந்திரன், (௪) காசிவிசுவநாதன், (௫) கஸ்தூரி, (௬) இலக்குமி என்னும் பெயரினராவர்

செல்வ வளம்

உடையப்பாவுக்குத் தம்முரிமையாக உள்ளூரில் விளைநிலங்கள் பலவும், கட்டிட இடங்களும், 50,000 ஆயிரம் வெண்பொன் செலவில் கட்டிய திருமகள் நிலையப் பங்களா ஒன்றும், கொட்டகுடிக் கிராமம் என்னும் தண்ணடை மிக்க சிற்றூர் ஒன்றும், மதுரை மாவட்டம் கோம்பை மலையுச்சியில் ஏலக்காய் விளையும் தோட்டமும், இலங்கைக் கொழும்பிலும், மலேயாச் சிங்கப்பூரிலும் கொடுக்கல் வாங்கற் கடைகளும் உள்ளன.

மண்டபப்படித் திருநாள்

பாகனேரிக் கண்கண்ட தெய்வமான புல்வாய் நாயகியம்மனுக்கு ஆண்டுகள்தோறும் ஆனித்திங்களில் நிகழும் திருவிழாவில் எட்டாந் திருநாளை மண்டபப்படியைப் பெரும்பொருட் செலவில் சிவகங்கை அரசர் கௌரிவல்லபத் தேவரவர்களிடம் உரிமைபெற்று வாங்கிப், புகழ்பெற்ற நாதசுர வித்துவான்களை அழைத்து இசையரங்கு கூட்டிப் புல்வாய் நாயகியம்மையை யெழுந்தருள்வித்து ஊர்வலம் வரச்செய்து தாமும் தம் தமையரும் நடத்திவந்தனர். அதற்கென மண்டபப்படிக் கட்டிடமும், குதிரை ஊர்தியும் அமைத்துள்ளனர்

பொதுநலத் தொண்டு

உடையப்பாவுக்கு அறிவறிந்த காலமுதலே நாடு மொழி கலை முதலியவற்றில் அளவற்ற பற்றுண்டு. தாம் பிறந்த குடிமரபின் சமயமாகிய சைவசமய நெறியிலும் மிகப் பற்றுதலுடன் திருநீறு உருத்திராக்கம் அணிந்து நாள்தோறும் பெரிய புராணம் ஓதிப் பாட்டுக்களை மனப்பாடஞ் செய்வார். புலால் உணவை நீத்துச் சைவ உணவு (மரக்கறி உணவே) பல்லாண்டு கொண்டு கடைப்பிடித்துவந்தார். பின் பதவிக் கூட்டுறவால் சைவ உணவை நீக்க மனம் நெகிழ்ந்தது. பின்னர் அவ்வூரில் கதர் இயக்கம், தீண்டாமை ஒழிப்பு, நூல் நூற்றல், வழக்குத் தீர்த்தல் முதலிய பலவகைத் தொண்டுகளில் ஈடுபட்டு அரிய பெரிய தொண்டு செய்துவரலானார்.

நாட்டு விடுதலை இயக்கம்

அந்நாள் நம் நாடு ஆங்கிலப் பேரரசின்கீழ் அடிமைப்பட்டுத் துவக்குண்டு கிடந்தபோது, அதன் விடுதலைக்காக அல்லும் பகலும் பாடுபட்டு ஓயாது உழைத்துவந்தார் அதற்காகத் தம் செல்வத்தை வாரிவாரிவழங்கினார். அரசினரின் பெரிய அடக்குமுறைச் சட்டத்தையும் மீறித் தம் குடும்பத்தாரின் வேண்டுதலையும் கடந்து சவகர் வாசகசாலை என்னும் ஒரு நிலையத்தைத் தம் நண்பர் திரு ஆர். வி சுவாமிநாதன் முதலியவர்களுடன் கூடி நிறுவினார். தமிழ்ப்பெரியார் திரு வி க. அவர்களை முதல்முதல் பாகனேரிக்குக் கூட்டிவந்து தமிழொலி முழக்கம் வீதியிலும் மணம்பெறச் செய்தவர் உடையப்பாவே. 1930-ல் காந்தியடிகளால் உப்புவரி குறித்துச் சட்டமீறல் இயக்கம் தொடங்கியபோது தாம் சென்று கலந்துகொள்ளவேண்டுமென்பது பேரவா. ஆனால், குடும்ப முதியவர்கள் விருப்பமின்மையால் தாம் செல்லாது பல தொண்டர்களைப் பொறுக்கி உப்புப்போருக்கு அனுப்பினார். அப்போது காரைக்குடிக் காங்

கிரசுக் கமிட்டித் தலைவராக இருந்த திரு பொ திருகூடசுந்தரம் அவர்களை ஊர்தோறும் அழைத்துச் சென்று சொற்பொழிவாற்றுவித்தும் தாம் சொற்பொழிவாற்றியும் தொண்டு பல செய்ததுடன், சத்தியாக்கிரக இயக்கத்துக்கு நன்கொடையாகப் பணங்கொடுத்தும் நிதி திரட்டியும் உதவினர். தாம் தவறாது கதிராடை அணிந்தும், பிறநண்பரை அணியச்செய்தும் வந்தார்

1941-ல் தனிமக்கள் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டு, இரண்டாவது உலகப் போரில், 'ஆங்கில மன்னருக்கு ஆளுதவியாவது, பொருளுதவியாவது செய்வது கூடாது' என்று எடுத்துரைத்த குற்றத்துக்காக ஆயிரரூபா ஈடுகாணம் கட்டி ஆறு திங்கள் சிறைத்தண்டனையேற்று அலிப்புரம் சிறையிலிருந்து கால எல்லை கடந்தபின் வந்தார்.

தமிழ்க் காதல்

தம் தாய்மொழியாகிய தமிழில் அளவற்ற பற்றுதலுடையவர். அதனால், பண்டித, ந மு வேங்கடசாமி நாட்டாரவர்களிடம் பெருநட்புக் கொண்டிருந்தார், கல்லல, கு க மணிவாசக சரணாலய சுவாமிகளையும் உரிமைமிக்க அன்புடையாராகக் கொண்டு இலகினர். அவர்கள் இருவரும் தம் நட்புக்கெழுதகைமை தோன்றத் 'தம்பி!' என மகிழ்வுற அழைப்பர்.

ஏறக்குறைய இருபதாண்டுகட்கு முன்னரேயே திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக உறுப்பினராகி, அதில் ஏறக்குறையப் பத்தாண்டுகள் வரை நிறைவேற்றற்கழக உறுப்பினராக இருந்து தம் பிரிவுகாலம் வரை தொண்டாற்றினர். தம அலுவலாளராகவும் நண்பராகவும் இருந்த தற்காலம் கழகப்புலவராக இருந்து வரும் செல்லூர்க்கிழார் செ ரெ. இராமசாமி பிள்ளையுடன் பலலாண்டுகள் அளவளாவி இருந்ததுடன் அன்னார் ஆக்கிய 'காந்தி முதுமொழி வெண்பா' என்னும் நூலைச் சவகா வாசக சாலைச் சார்பில் அச்சிட்டு அரங்கேற்றினர். இன்னும் தனித்தமிழில் எழுதவும் பேசவும் பயின்று அவைகளில் சிறந்து திகழ்ந்தார். இன்னும் தமிழுக்காகப் பல கடமைகள் புரிந்தார். சென்ற சட்டசபைத் தேர்தலில் சேது மன்னரவர்களை எதிர்த்துப் போட்டியிட்ட முகவை இராசமாணிக்கம், தற்கால அரிசன நலக் கண்காணிப்பாளரான திரு. ஆர். எஸ். மலையப்பன் போன்றார்க்குக் கல்லூரிப் படிப்புக்காகப் பொருளுதவி புரிந்தனர். பல ஏழை மாணவர்க்கும் காலங்கருதிக் கைம்மாறு புரிந்துள்ளனர்.

தந்நலத் துறவு

இலங்கையில் ஆண்டுதோறும நூறுயிரம் வெண்பொன் வருவாய் தரத்தக்க கள்ளுக்கடைக் கூட்டுறவுக் குழுமததில் தமக்கு இருந்த தொடர்பை நீக்கிவிட்டதுடன் தம் தமையனையும மைததுனரையும் விட்டுவிடச் செய்த சிறப்பும் திரு. உடையப்பாவின் சிறநத தந்நலமற்ற நிலேயே ஆகும். மேலும் பெரியார் விநோபாபாவே அவாகளின் நிலக்கொடை வேள்விக்குத தம் நன்கொடையாக 8000 வெணபொன் மதிப்புள்ள 5 ஏக்கர் நிலங்களே அளிததனர்

அரசியலாரால், சமீன் ஒழிப்புத் துவங்கிய காலத்தேயே தமக்கு உரிமையுளள 200 ஏககா நிலபபரப்புள்ள தண்ணடையான கொட்டகுடி எனனும கிராமததின் மேலவார உரிமையை ஏற்றுககொள்ளுமாறு தாமே மாவட்டத் தண்டலாளருக்கு எழுதி உரிமைப்படுததிக்கொள்ள வேண்டினா. சிவகஙகை நகரில் பாற்பண்ணே வைததது நடத்திவந்தனா. இவ்வெலலாம தந்நலந துறநத தகைசால பண்பனரே ?

பதவித் தொடர்பு

1932-ல் சிவகங்கைத தாலூகா போர்டு, இராமநாதபுரம் மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத தோநதெடுக்கப் பெற்றா. 1936-ல நீதிக்கட்சிச் சாாபில் நிகழ்நத போட்டிக் கிடையிலும மிக்க வாககுகளால் தேர்நதெடுககபபெற்று இராமநாதபுரம் மாவட்டக்கழக உறுப்பினரானர். 1937-ல் அத் துணைத்தலைமை யேற்றார் மீண்டும் 1949-ல அதன் தலைவராகத் தேர்நதெடுக்கப்பெற்று 1953 சூன் திங்கள் வரை அக் கழகம தலைக்கபபடுமகாறும பல அருநதொண்டுகள் புரிநதார். அவற்றுள், பரமக்குடி வையை யாறறுக்குக் கட்டப்பெற்ற 'உடையப்பா பால'மும, முததது. உல. உலகபப செட்டியாா பாலமும், பேரையூர்ப் பாலமும, சிவகஙகை மகப்பேறில்லமும், பாகனேரி திரு உ. இரு மு முத்தையா அம்பலம உயர்நிலைப் பள்ளியும் முதலிடம பெறத்தககன.

சென்னைச் சட்ட அவை உறுப்பினா பதவி

1952-ல் தென்பகுதி மாவட்டப பொதுக்கழகத் தொகுதியிலிருநது மேல்சபை உறுபபினராக மிகுதியான வாக்காளர்களால் தோநதெடுக்கப்பட்டார். இறுதிக் காலம்வரை உறுப்பினராக இருந்து தொண்டுகள் பல செய்தார் சிவகங்கைச் சமீன் உழவா சங்கத்தின் தலைவராயிருந்து பிரகாசம் விசாரணைக் குழுமுன தக்க சான்றுகள கூறிச் சமீன் ஒழிப்புக்குப் பாடுபட்டார். இன்னும் அன்னார் ஆற்றிய தொண்டுகள் பல.

மறைதல்

இவர்தம் பொதுநல வாழ்வுக்குத் துணையாக இருந்து உடல் பொருள் ஆவி மூன்றாலும் தோள்போல் உதவினோர் இவர்தம் முன் தோன்றல் பில்லப்பா அவர்கள். அன்னார் கடந்த ஆண்டில் தம் பருவுடல நீத்து மறைந்தார அவர பிரிவால் ஏஙகினர். 'உடற்பிறப்பால் தோள்வலி போம்' என்பதை உணாநதார. அவர்ப் பற்றிய கவற்சி, அவர் இலலப் பொறுப்பு, பிறவெலலாம ஒன்றுபட்டு இவர்தம் மனத்தை அலைத்தன; வாட்டின; அந்தோ கண்ணறையான காலனும் நண்ணினன்.

13—3—54 காலைப்போது வந்தது; கதிரவனும் இவர் மறைவுக்கு வருநதுவான்போல் கணணைச் சுருககி விழிததுக் கொண்டு சென்று மறைநதான் மாலை நங்கை வநது மலர்க் கண்ணீா மல்க, வாய்விண்டு நடுககமுற்றழ, மாலை எ-மணிககுத் தம நல்லுயிா மாரடைபபால் வானேக, யாக்கை நமாக்கொழிய விட்டு மறைவுற்றார்.

நன் காட்டில் உடையப்பா

அப்பொழுதே கமபிச் செய்திகள் பல்லிடங்கட்கும் பறந் தன. உடையபபாவின் முதன் மகனார் திரு சுப்பிரமணியன் அவாகள் இலஙகைகக கொழுமபுவில் உறைந்துவந்தா. கம்பி எட்டியதும மனந் துடிதுடிதது வருந்தினா, மாழ்கினர். மற்றைநாட் காலை கo-மணி அளவில வானூாதியில் பறந்து, நிலவூர்தியில் ஊர்ந்துவந்து, தம அரிய தந்தை — நாட்டுத் தநதை—தமிழ்த் தந்தை—பொதுமக்கள் தந்தையின் பொன் னுடல கண்டு மிக வருநதிக கண்ணீர் உகுத்தனர். வெளியூர்களி லிருநதும உள்ளூரிலிருந்தும் மக்கட்கூட்டம் யாண்டும் குழுமித் தம இறுதிககடனை ஆற்றித் தெருமரலெய்தியது.

மலர்களால் அணி செய்யப்பெற்ற திருத்தேர் ஒன்றில் நாட்டுக் கொடி பறந்து ஆடி நடுங்க, உடையப்பாவின் திருவுடல் மலர்களால் அணிவித்து ஏற்றித் தம் முன்னோர்களால் அமைத்த சிறு விளாக் கண்மாய்த் திடலில் கொணர்ந்து வைத்தனர். பல அன்பர்கள அந் நன்காட்டில் இவர் புகழ்மாலைபற்றிப் பேசினர்.

மக்கள் நால்வரும் அகங்கரைநது இறுதிக்கடன் ஆற்ற நடுகல்லில அமர்நதனா, நம் உடையப்பர்.

வாழ்க உடையப்பா வண்புகழ் !

[1] திருக்குறளில் சங்க இலக்கிய மணம்

[டாக்டர், திரு. மு. வரதராசனார்]

திருக்குறளில் சங்க இலக்கிய மணம் கமழ்கின்றதா? அல்லது சங்க இலக்கியத்தில் திருக்குறள் மணம் கமழ்கின்றதா? என்று ஆய்வு நிகழ்வதுண்டு. ஆய்வு என்பதே பல இடங்களிலும் இழுத்துச்செல்லும் ஓர் பேராற்றல். அது செல்லச் செல்ல எல்லையற்ற நல்லின்பந் தரவல்லது இஃது உண்மை கண்டுணர்ந்த அனுபவம். எப்போதும் எவரும் அனுபவத்திற்குப் பெருமை தரவேண்டும். இலக்கிய மதுவை அருந்தும் இன்பம் எண்ணற்றது. குயிலும் மயிலும் நிறைந்த குளிர்பூஞ் சோலையிலே கருத்தொருமித்த காதல் இளைஞர் எய்தும் இன்பம்போல—தாயின் அணைப்பில் மகிழும் அன்புக் குழந்தையின் அளவற்ற இன்பம்போல—இலக்கியத்தை ஆராயும் இன்பமும் அளவற்றதாகும்.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமையான மொழிகள் உலகில் பலவுள. ஈபுரு போன்ற பழமையான மொழிகள் இன்னும் இலக்கியவளம் பெறவில்லை நம் நாட்டில் வழங்கும் தென்மொழியும் வடமொழியும் இலக்கிய வளமும் இலக்கண வரம்பும் பெற்றவை. இவ் இருபெரு மொழிகளுள் தென்மொழியாகிய நம் தீந்தமிழ் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே நல்ல இலக்கிய வளத்தைப்பெற்று மிளிர்ந்தது. வடமொழியோ இயற்கையோடு பொருந்தித் திருந்தாத காரணத்தால் பேச்சு வழக்கை யிழந்தது. இயற்கையோடு பொருந்தித் திருந்திய அருந்தமிழ் இன்றும் கன்னித் தன்மையுடன் நின்று நிலவுகின்றது. நம் தமிழ்மொழியில் சங்க இலக்கியம் தோன்றிய காலம், உலகத்திலே பல மொழிகள் எழுதப்பெறாத காலம்; பலர் பேச்சையறியாத மிகப் பழங்காலம்; பல மொழிகளில் கவியோ காவியமோ தோன்றாத தொன்மையான காலம்; அத்தகைய பழமையான காலத்தில் சிறந்த இலக்கிய வளத்தைப் பெற்று விளங்கியது நம் தமிழ்.

சங்க இலக்கியம் ஏற்பட்ட காலத்திலே முப்பது பெண்பாற் புலவர்கள் வாழ்ந்து பெருங்கவிதை பாடியுள்ளார்கள். சிறந்த கல்வளம் மிகுந்த காலம் சங்க இலக்கிய காலம். திருவள்ளுவர்

---

1. 21-3-54-ல் நெல்லை அருணகிரி இசைச்சங்க அரங்கத்தில் டாக்டர். மு. வரதராசனார் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம். வித்துவான், திரு. அ. க. நவநீத கிருஷ்ணபிள்ளை குறிப்பெடுத்தெழுதியது.

வாழ்ந்து திருக்குறள் இயற்றிய காலம் சங்க இலக்கியங்கட்கு இடைப்பட்ட காலம் என்பர் சிலர். சிலர் சங்க இலக்கியங்களின் இறுதிக்காலம் என்பர். சங்க இலக்கியங்கள் திருவள்ளுவர்க்கு முந்திப் பெரும்பான்மையும் பிந்திச் சிறுபான்மையும் எழுந்தனவென்னலாம். ஆதலின், திருக்குறளில் சங்க இலக்கியம் கமழ்கின்றதென்றாலும் சங்க இலக்கியத்தில் திருக்குறள் மணம் கமழ்கின்றதென்றாலும் கருத்தொன்றே.

சங்க இலக்கியங்களை அகம், புறம் என்ற இருவகையாகப் பிரிக்கலாம். அகம் - உள்; புறம் - வெளி இவற்றை வீட்டு வாழ்வு, நாட்டு வாழ்வு எனச் சொல்லுதலும் பொருந்தும். நாட்டு வாழ்வு பரந்த இடத்தையுடையது, அரசனோடு தொடர்புடையது; வீட்டு வாழ்வு குறுகிய இடத்தையுடையது; தலைவன் தலைவியோடு கூடியது, இதனை அகம் என்பர் அது இன்பத்தின்பாற்பட்டது 'ஊடுதல் காமத்திற்கு இன்பம்' என்பார் திருவள்ளுவர் கணவனுக்கும் மனைவிக்கும் ஊடல் நிகழ்வது இருபதாம் நூற்றாண்டில் மட்டுமன்று. உலக வாழ்வு தொடங்கியநாளிலேயே ஊடல் தோன்றியதுதான் உணவுக்கு உப்பைப் போலக், காதலர் மனையற வாழ்வில் ஊடல் இருக்கவேண்டும், அது, தலைவன் தலைவியைப் பிரிந்தபொழுது எழுவது; தலைவனது தவறை மறைமுகமாகக் கண்டிக்கும் நோக்குடன் எழுந்த வெறுப்புணர்ச்சியே அந்த ஊடல், அதனைக் காட்டுதற்குத் தலைவிக்கு வாய்ப்புக் கிடைத்தது, அவள் அதனைப் பயன்படுத்தும்போது, எண்ணிப்பார்க்கும் ஆற்றலிருந்தால் கடுங்கோபக்காரனும் தணிந்து பணிந்து கனிந்து நிற்பான்.

தலைவி, ஊடலைக் கையாளும் திறத்தைக் காணுங்கள். தலைவனைப் பிரிந்த தலைவி, அவன் வீட்டுள் வரும் வேளையில் தன் குழந்தையோடு கொஞ்சுகின்றாள். கணவனது அடாத செயலை இடித்துக் கூறுபவள்போல, அவனது செயலைப்பற்றி ஏதேதோ குறும்பாகத் தன் குழந்தையுடன் இன்ப உரையாடிக்கொண்டிருக்கின்றாள் கணவன் வந்த வரவையே கவனியாதவளைப் போல, அவனுக்கு மலர்ந்த முகத்தாலோ புன்முறுவலாலோ வரவேற்பளிக்காமல் அந்தக் குழந்தையுடன் கொஞ்சுகிறாள். தலைவியின் கோபத்தைத் தலைவன் உணர்ந்துகொண்டான். தானும் குழந்தையின் பக்கம் நெருங்கினான் குழந்தையுடன் தானும் கொஞ்சத் தொடங்கிவிட்டான். 'யாமும் காதலம் அவற்கு' என்று கூறிக் கொஞ்சுகிறான் தலைவன்.

பலமுறை உழுது காயவிட்ட காரணத்தால் நிலம் மெல்லிய புழுதியாக மாறிக் கிடக்கிறது. அதிலே மழை பெய்தவுடன்

நிலம் நெகிழ்ந்து கூழாய்க் கிடக்கின்றது. அதுபோல எனது நெஞ்சமும் நெகிழ்ந்து அழைபோகியது; ஆதலின், 'யாமும் காதலம் அவற்கு' என்று சொல்லிக் கொள்ளுகிறான் தலைவன். இது சங்க இலக்கியத்தில் காணும் ஒரு காட்சி. இதனைத் திருவள்ளுவர் தமது திருக்குறளில் காட்டும் திறனைக் காணுங்கள்.

"நிணம்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்"

மாலைக்காலம் பொல்லாத காலம்; இளங்காதலர்க்கு இன்பந் தருங்காலம்; மணந்தார்க்கு இன்பமும் தணந்தார்க்குத் துன்பமும் தரும் காலம்; மாலை என்பதே மயக்கம்; அறிவை மயக்கும் காலம் அது. மாலையில் நமக்கு உடலிற் குழைவு உண்டாகும்; நோயாளிகட்கு மாலையில்தான் நோய் மிகும், கவலைகொண்ட நெஞ்சினார்க்கு மாலையில் அக்கவலை பெருகுவது கண்கூடு. பிசைசக்காரன் துன்பம் இரவில்தான் பெருகக் காண்கிறோம். பிரிவுத் துன்பத்தை அகற்ற இந்தக் காலத்தில் எத்தனையோ சாதனங்கள் உண்டு. சங்க காலத்தில் எந்தச் சாதனமும் கிடையாது. அந்தப் பழங்காலத்தைக் கற்பனை செய்து காண வேண்டும். கணவனைப் பிரிந்திருக்கும் மனைவி, இந்தக் காலத்தில் இடையிடையே கணவன் கையெழுத்தைக் காணமுடியும் அவனது குரலைக் கேட்க விரும்பினால் தொலைபேசியின் வாயிலாகப் பக்கத்திலிருந்து உரையாடுவதுபோல உரையாடி உள மகிழ்ந்துகொள்ள முடியும். ஆனால், அந்தப் பழங்காலத்தில் பிரிந்து சென்றால் திரும்பவந்து பொருந்துமவரையும் பெருந் துன்பந்தான்.

தலைவனைப் பிரிந்த தலைவியொருத்தி தோழியிடம் சொல்லி வருந்துகிறாள்: "யாது சொலவேன்கொல தோழி; கொலை குறித்தன்ன மாலை என்னை வாட்டி வருத்துகின்றதே; இந்த வேளையில் கல்லாத கோவலர் ஊதும் புல்லாங்குழல் தரும் எல்லையற்ற துன்பந்தான் என்னே! குழலிசையும் மாலைவேளையும் கூடி என்னைக் கொலை செய்வதுபோல் நிலைகுலையச் செய்கிறதே," என்று ஏங்கித் துடிக்கிறாள். இது சங்க இலக்கியத்தில் கமழும் மணம்.

இந்த மணத்தைப் பொதிந்து கமழச் செய்யும் திருக்குறள் மலரைக் காணுங்கள்!

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை."

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனை உள்ளி, அவனிருக்கும் இடந்தேடித் தலைவியின் நெஞ்சம் விரைந்து செல்கிறது.

உடலைவிட்டு உயிரே நீங்கிச் செல்வதுபோலச் செல்கிறது. தலைவன் உயிராகவும் தலைவி உடலாகவும் அமைய வாழும் வாழ்வில் தலைவனைப் பிரிவது, உயிரை இழப்பதுபோல இருக்கிறது தலைவிக்கு. அந்த உயிர், வானில் பறவை விரைந்து பறந்து செல்லுதல்போலச் செல்கிறது என்று சொல்கிறாள் தலைவி. இது சங்க இலக்கியத்திற் காணும் கருத்து. இதனைப் பொதிந்து காட்டும் வள்ளுவர் குறளைப் பாருங்கள்!

> "பொருள்மாலை யாளரை யுள்ளி மருள்மாலை
> மாயும்என் மாயா உயிர்"

உயிர், உடலைவிட்டு நீங்கிச் செல்வதை முட்டையினின்று வெளிப்படும் பறவைக் குஞ்சுக்கு ஒப்பிட்டுரைப்பார் வள்ளுவர்,

> "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
> உடம்போ டுயிரிடை நட்பு"

காதலர் வாழ்விற் பிரிவு ஏற்பட்டால் அது சாதல் துன்பத்தைத்தான் தரும் என்பதைப் பாரதியாரும் கூறுவார்.

> "காதல் காதல் காதல், காதல் போயிற் சாதல்"

என்பார் பாரதியார். தலைவன் தலைவியரது நட்பு, உயிரும் உடம்பும் போன்ற இன்றியமையாத தொடர்புடையது. இதனைச் சங்க இலக்கியத்திற் பல இடங்களில் காணலாம்.

> "யாக்கைக் குயிரியைந் தன்ன நட்பின்
> அவ்வுயிர் வாழ்தல் அன்ன காதல்
> சாதல் அன்ன பிரிவறியேம்."

என்னும் சங்க இலக்கியம். இக்கருத்தைத் திருக்குறள்,

> "உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
> மடந்தையொ டெம்மிடை நட்பு."

என்று கூறும். அதனையே மற்றோர் இடத்தில்,

> "வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
> அதற்கன்னள் நீங்கு மிடத்து."

என்று கூறுவார் வள்ளுவர்.

திங்களைப் பெண்கள் முகத்திற்கு ஒப்பாகப் பேசுவர். தன் மனைவியின் முகம் எங்ஙனமிருப்பினும் திங்களைப் போன்ற திருமுகமுடையாள் என் மனைவி என்று நினைப்பவன், தனது வாழ்வில் தனிப்பேறு பெற்றவன். மனைவியல்லாத மற்றவர் மதிமுகந்தான் அழகுடையது என்று எண்ணுபவன் வாழ்வில் ஏமாற்றமடைந்தவன். தன் வீட்டு உணவு இனியது; தன் குழந்தை நல்ல குணமுடையது என்றெல்லாம் எண்ணி மகிழ்பவன் உண்மையாகவே வாழ்வில் இன்பம் பெற்றவன்.

தலைவன் ஒருவன, மலைமுகட்டில் தவழ்ந்து செலலும் மதி யதனை நோக்கிக் குறை கூறுகிறான. என் மனைவியின் திலக மிட்ட திருநுதலையுடைய முகததைபபோன்ற அழகு உன்பால் உணடோ? என்று கேட்டுத, தன் காதல மனைவியின் தண்மதி முகததை நினைநது கனிநது இனபுறுகின்றான இநதக கருததைத் திருவள்ளுவர் பல குறட்பாககளில பலவேறு முறையில் காட்டிக் களிப்பூட்டுகிறார

இறுதிக் குறளில தலைவன் திங்களுக்கு அறிவுரை கூறு கிறான் கற்புடைய என தலைவியின் முகததை நீ ஒததிருக்க விருமபினால் வான வெளியில பலா காண வருவது முறையாகுமா? பெண்ணியல்புக்குப் பொருத்தமற்ற செயலாகுமே அஙஙனம பலர் காணத் தோன்றாதே என று கூறுகிறான்.

> "அறுவாய நிறைநத அவிர மதிககுப் போல
> மறுவுணடோ மாதா முகதது."

> "மாதா முகம்போல ஒளிவிட வல்லையேல்
> காதலை வாழி மதி"

> "மலரன்ன கணணாள் முகமொததி யாயின்
> பலாகாணத தோன்றல் மதி"

தலைவன கனவொன்று கண்டான், கனவு ஆற்றலுடையது; இறநதவனையும் எழுப்பவலலது, அததகைய கனவில தலைவி, தலைவன்முன தோன்றினாள அவனுடன பலவேறு வகையில் இன்பநதுய்த்து மகிழ்சசி மிகுநது நிற்கையில் கனவு கலைந்தது. அந்தக் கனவைப் பழிபபதா? பாராட்டுவதா? அநத இனபக் கனவைத் தலைவன் எணணிப போற்றுகிறான்

> "நுணபூண மடநதையைத் தநதோய போல
> இன்துயில எழுப்புதி கனவே
> எள்ளா ரமம துணைபுரிந் தோரே."

என்று சஙக இலக்கியத்தில் தலைவன் கனவைப் புகழ்ந்ததைக் காண்கிறோம இதனைத் திருக்குறளில் வள்ளுவர் சொல்லும விதம் மிக்க அழகியதாகும் என்னைப பிரிநது சென்ற காதல ரைப்பற்றி ஏதுமே அறியமுடியாதபடி யிருந்த எனக்கு, அவர் அனுபபிய தூதுடன் வநத கனவுககு யான் என்ன விருந் தளிப்பேன் என்று எண்ணுகிறாள தலைவி.

> "காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
> யாதுசெய வேன்கொல் விருந்து."

என்பது திருக்குறள் இதுகாறும் அகத்துறைக் கருத்துக்களை நோக்கினோம. இனிப் புறததுறைக் கருத்துக்கள் சிலவற்றை நோக்கியமைவோம்

உலகில் இயமனுக்கு ஆளாகாமல் பிறர்க்கு ஆளானவர்கள் தான் பெருமையுற்றவர்கள். பிறர்க்கென வாழ்ந்து பிறர்க் கென்றே தமமுயிரையும தியாகம் செய்த சிலர்களே ஞாலத்தில் சிறந்தவரெனப் பேசபபெறுவர்.

"நோற்றோா மனற தாமே
கூற்றம் கோளுற விளியாப
பிறாக்கென விளிநதார்."

என்பது சங்க இலககியம. இதனைத திருவள்ளுவர்,

"ஒபபுரவி னுல்வரும் கேடெனின் அஃதொருவன்
விறறுககோள் தகக துடைததது."

என்பார

ஈரநெஞசம படைததோர் ஏனையவர் துனபங்கண்டு பெரி தும வருநதுவா. அததகைய பணபு, மிக அருமையானது, அஃது ஒரு பெருஞசெலவம் என்பாா ஒரு சஙககாலப புலவர்.

"நெடிய மொழிதலும கடிய ஊாதலும
செலவ மனறுதம செய்வினைப் பயனே
சானறோர் செலவம் எனபது சோநதோா
புன்கண அஞசும் பண்பின்
மென்கட செல்வம செலவமென் பதுவே."

இதனைத் திருவள்ளுவர்,

"அருட்செலவம் செல்வதத்துட் செல்வம் பொருட்செல்வம
பூரியாா கணணும உள."

என்பார். அருளைச் செல்வமென்றும, அது செல்வத்துட் செல் வம என்றும போற்றுவாா.

நன்மனம் படைதத பேரறிஞர் பெர்னுட்ஷா, காலை ஒரு முறை நக்கிய நாயை என்னுல் எட்டியுதைக்க மனம் வராது என்றார். மானின் மருண்ட பாாவையைககண்டு மனம் நெகிழ்ந்த நம் தேசத்தலைவர் நேருபெருமான், வேட்டையாடுதலை அன்று முதல் விட்டொழிந்தார். நனறியுணர்ச்சியுடன் நோக்கும் அன்புகலநத பாாவை, வன்மனத்தையும் மென்மையாக்கி விடு கிறது.

தோழி, தலைவனுக்குக் கூறும் அறிவுரையில்,

"முந்தை யிருந்து நட்டோா கொடுப்பின்
நஞசு முண்பா நனிநா கரிகா."

என்றாள். இது நற்றிணையென்னும் சங்க இலக்கியத்திற் காண் பது. இதனைத் திருவள்ளுவர்,

"பெயககண்டும் நஞ்சுண் டமைவர் நயததகக
நாகரிகம் வேண்டு பவர்"

என்ற குறட்பாவில் கமழச் செய்கிறார்.

புறநானூறுப் பாடலொன்றில் அரசன் ஒருவனுக்கு அற மொழி கூறும் புலவரொருவர், ஆன்முலே யறுத்த அறனில்லோர் முதலாய தீவினை செயதாா பலர்க்கும அததீவினையை யொழிக்கக் கழுவாயுண்டு ஆனால் ஒருவன் செய்த நன்றியை மறந்த பாவத் திற்குக் கழுவாயே யிலலை

"செய்தி கொனறோாககு உய்தியில்லென
அறமபா டிற்றே ஆயிழை கணவ."

என்று கூறினர் இக்கருத்து,

"எந்நன்றி கொன்றாாககும உய்வுண்டாம உய்வில்லை
செயநநனறி கொனற மகற்கு"

என்ற திருக்குறளில் கமழக் காணலாம. அறம் என்று குறிப் பதே திருக்குறளைத்தான் என்பா அறிஞர்

வளளல்களைப புகழ்நதுபாடிப் பரிசுபெற்று வாழும பரிசில் வாழ்ககையையுடைய புலவரொருவர், 'ஈயென இரத்தலோ அரிது, நின கொண்பெருங கானம பாடலோ எளிது' என்று இரப்பின் இழிவை வலியுறுத்திப பாடினர் இந்தக் கருததை,

"ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிறகு
இரவின இளிவந்த தில."

என்ற திருககுறட் பாவில கமழக் காணலாம. இதனையே மற்றொரு சஙகபபுலவர்,

"ஈயென இரததல் இழிந்தன்று, அதனெதிர
ஈயேன் என்றல அதனினும இழிந்தன்று."

என்று பாடினர்.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி என்னும் பாண்டிய மனனன் ஒருவன், இளமையிலேயே பேரறிவுபெற்று விளங்கிய வன்; பகைவருடன கடலிடையே கபபற்படையைச் செலுததிக் கடும்போா புரிநது மாயநதவன்; இந்த உலகம் அழியாது நிலைத் திருப்பதற்குக் காரணஙகள யாவையென ஆராய்நது அறுதி யிட்டுக் கூறினன். தேவர்கட்குரிய தேவாமுதம் கிடைததாலும் இனிதென்று தனிததுண்ணார், பகுத்துண்பார. கோபமோ வெறுபபோ கொள்ளமாட்டார். பிறர் அஞ்சத்தக்கவற்றிற்குத் தாமும் அஞ்சிச் சோம்பியிரார். புகழ் வருவதாயின் உயிரையும் உவந்து கொடுப்பர். பழி வருவதாயின் அதற்குக் கைம்மாறாக

உலக முழுதுமே பெறுவதாயிருந்தாலும் விரும்பமாட்டார்கள். அத்தகைய சிறந்த இயல்புகளையுடையவராய்த் தமக்கென்று முயலாது பிறர்க்கென்று முயலும் வலிய முயற்சியுடையார் சிலர் உலகில் வாழ்வதாலேயே உலகு நிலைபெற்றுள்ளதெனக் கூறினன் இதனையே திருவள்ளுவர் திருக்குறள் மலரில்,

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்று மணம் கமழக் காண்கிறோம். இன்னும் எத்தனையோ சங்க இலக்கியக் கருத்துக்கள் திருக்குறளில் மணம் வீசுவதைக் காணலாம்.

பாகனேரி ஊர்திரு. சி. உ. சுப. உடையப்பர்
அவர்கள், எம். எல். சி. பிரிவு குறித்து
இரங்கிக் கூறிய

'உடையப்பக் காஞ்சி'

அருந்தவங்கள் பலவாற்றி அன்னைஉடை யம்மைபெற்ற
இருந்தவனே! உடையப்ப எந்தலே! நீ எங்கனையோ?
பெருந்தகைமை உறுபழனி யாயிபில் லப்பனார்றாய்
மருந்தென்ன வளர்ப்புற்ற மாமகனே! மறைந்தனையோ? (க)

வற்றாத அன்புடையாய்! மாற்றலார்க்குப் போரேறே!
கற்றார்தம் கண்ணனையாய! காவலார்க்குக் காவலனே!
அற்றார்தம் அருமணியே! ஐயகோ! யாண்டுற்றாய்
உற்றார்க்கும் மற்றார்க்கும் உடையப்பன் எனுமதகையே! (உ)

தாமரையை வென்றமுகம் தண்ணிலவின் புன்சிரிப்பு
காமருவு பீடுநடை கனிவுநிறை உள்ளன்பு
ஆமிவைகள் என்னெஞ்சை அள்ளூறித் துன்புறுத்த
நீமறைந்தாய் என்செய்கோ! நிலையாமை நெறியிதுவோ! (௩)

செல்லூர்க்கிழார்,
செ. ரெ. இராமசாமிபிள்ளை,
கழகப் புலவர்.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை திரு. சீனி வேங்கடசாமி]

முற்காலத்தில் இருந்து இப்போது மறைந்துபோன நூல்கள் எவை என்று ஆராய்ந்துபார்க்க எண்ணங்கொண்டு அவற்றை ஆராய்ந்து பார்த்தேன். எமது ஆராய்ச்சிக்கு இது வரையில் அகப்பட்ட, மறைந்துபோன நூல்கள், நூற்றுநாற்பத்தைந்து என்று அறிந்தபோது வியப்படைந்தேன். அந்நூல்களைத் தமிழ் உலகத்துக்குக் காட்டவேண்டுவது கடமை என்னும் எண்ணத்தினால், செந்தமிழ்ச் செல்வியில் வெளியிட முற்பட்டேன். தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு இந்த ஆராய்ச்சி பயன்படும் என்று நம்புகிறேன்.

1. காரிக் கோவை

காரிக்கோவை என்பது காரி என்பவரால் செய்யப்பட்டது. இந்தக் காரியார், பெரியபுராணத்தில் கூறப்படுகிற காரி நாயனார் ஆவார். இவர் திருக்கடவூரில் இருந்த சிவபத்தர்; தமிழ்ப் புலவர். இவர் சிவபெருமான்மீது செய்யுள் பாடினார் என்று நம்பியாண்டார் நம்பி தாம் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியில் கூறுகிறார்:

“புலனன வாகா வகையுல கத்துப் புணர்ந்தனவுஞ்
சொலலின வுநய மாகச் சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்குங் கயிலைபுக் கானென்பரால்
கலலன மாமதில் சூழ்கட வூரினிற் காரியையே.”

இவர் சிவபெருமான்மேல் இயற்றிய செய்யுளுக்குக் காரிக்கோவை என்பது பெயர் என்றும், சொல் விளங்கிப் பொருள் விளங்காத முறையில் இஃது இயற்றப்பட்டதென்றும், சேர சோழ பாண்டிய அரசர்களிடம் இக்கோவையைக் கொண்டுபோய் ஓதிப் பொருள் உரைத்து அவர்கள் வழங்கிய பொருளைக் கொண்டு காரியார் சைவத்தொண்டு செய்துவந்தார் என்றும் சேக்கிழார் அடிகள் தமது பெரியபுராணத்தில் கூறுகிறார்:

“மறையாளர் திருக்கடவூர் வந்துதித்து வண்டமிழின்
துறையான பயன்தெரிந்து சொல்விளங்கிப் பொருள்மறையக்
குறையாத தமிழ்க்கோவை தம்பெயரால் குலவுமவகை
முறையாலே தொகுத்தமைத்து மூவேந்தர் பாற்பயில்வார்.”

“அங்கவர்தாம் மகிழும்வகை அடுத்தவுரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மன்னவர்பால் பெற்றநிதிக் குவைகொண்டு
வெங்கண்அரா வொடுகிடந்து விளங்கும் இளம் பிறைச்சென்னிச்
சங்கரனார் இனிதமருந் தானங்கள் பலசமைத்தார்.”

என்பன பெரியபுராணம், காரிநாயனார் புராணச் செய்யுள்கள்.

காரிநாயனர் இயற்றிய இந்தக் காரிக்கோவை இபபோது கிடைக்கவில்லை. ஆகவே மறைவுற்ற தமிழ் நூலகளில இதுவும் ஒன்று

கி பி 9-ஆம் நூற்றுண்டில் இருந்த சுந்தரமூர்த்தி நாயனர் தமது திருத்தொண்டத தொகையில காரிநாயனரைக் குறிப்பிடு கிறபடியினுலே, இவர் காலம 9-ஆம நூற்றுண்டிற்கு முறபட்ட காலம் எனக் கொள்ளவேண்டும

2 குமாரசேனுசிரியர் கோவை

இப்பெயரையுடைய ஒரு நூல இருநதது என்பது யாப் பருஙகல விருததியினுல் தெரிகிறது. குமாரசேனுசிரியர் என் னும புலவரால் இயற்றபபட்டதாகலின இபபெயா பெறறது போலும யாபபருஙகல விருததியுரைகாரா இநநூலைபபற்றி இவ்வாறு குறிப்பிடுகிருா —

"குமாரசேனுசிரியர் கோவையும தமிழ முததரையர் கோவை யும் யாபபருங்கலக காரிகையும போன்ற சநதத்தால வருவன வற்றின் முதறகண் நிரையசை வரின் ஓரடி பதினேழெழுத்தாம். முதற்கண் நேரசை வரின் ஓரடி பதினறெழுததாம. இவ்வா றன்றி மிக்கும் குறைநதும் வாரா. அவை எணணுகின்றுழி ஆய்தமும் ஒறறும ஒழிதது உயிரும் உயிாமெயயும குற்றிய லிகரமும குறறியலுகரமுஙகொண்டு எண்ணபபடும"

இவ்வாறு எழுதிய உரையாசிரியா கீழ்ககண்ட கலித்துறைச் செய்யுளை உதாரணமாக மேற்கோள காட்டுகிருா .

"இருநெடுஞ் செஞ்சுட ரெல்கமொன் றேந்தி யிரவின்வந்த
வருநெடுங காதற்கன றேதரற் பாலதல லாதுவிட்டால்
கருநெடு மால்கட லோநதிய கோன்கயல சூடுநெற்றிப்
பெருநெடுங குன்றம் விலையோ கருதிலெம் பெண்கொடிக்கே."

இந்தச் செய்யுளை இவ்வுரையாசிரியர், யாப்பருங்கலம் சீரோதது 15-ஆம் சூத்திர உரையிலும, ஒழிபியலில் இரண்டி டங்களிலும் மேற்கோள் காட்டியிருக்கிருா. ஆனல், இச் செய்யுள் எந்த நூலைச் சேர்நதது என்று கூறவில்லை என்றுலும், குமாரசேனுசிரியர் கோவையைச் சேர்ந்தது இந்தச செய்யுள் என்று கருதபபடுகிறது.

குமாரசேனுசிரியர் கோவையைப்பற்றி வேறு ஒரு செய்தி யும் தெரியவில்லை. இதுவும் மறைவுற்ற தமிழ்நூல் ஆகும்.

3. தமிழ் முத்தரையர் கோவை

இப்பெயரையுடைய ஒரு நூல் இருந்ததென்பது, தண்டி யலங்கார உரையாசிரியர், யாப்பருங்கல விருத்தியுரைகாரர் ஆகிய இருவரும் கூறுவதிலிருந்து தெரிகிறது.

தண்டியலங்காரம், பொதுவணியியல் 7-ஆம் சூத்திர உரையில் அதன் உரையாசிரியர், 'கோவை என்பன தமிழ் முத்த ரையர் கோவை முதலாயின' என்று கூறுகிறார்.

யாப்பருங்கலம் ஒழிபியலில் அதன் விருத்தியுரைகாரர் இந்நூலைக் குறிப்பிடுகிறார். அவர் கூறுவது இது :

"குமாரசேனாசிரியர் கோவையும் தமிழ் முத்தரையர் கோவை யும் யாப்பருங்கலக் காரிகையும் போன்ற சந்தத்தால் வருவன வற்றின் முதற்கண் நிரையசை வரின் ஓரடி பதினேழெழுத்தாம். முதற்கண் நேரசை வரின் ஓரடி பதினாறெழுத்தாம் இவ்வா றன்றி மிக்கும் குறைந்தும் வாரா. அவை எண்ணுங்கால் ஆய்தமும் ஒற்றும் ஒழித்து, உயிரும் உயிர்மெய்யும் குற்றிய லிகரமும் குற்றியலுகரமும் கொண்டு எண்ணப்படும்."

இவ்வாறு எழுதிய உரையாசிரியர் கீழ்க்கண்ட செய்யுளை உதாரணம் காட்டுகிறார்.

"காய்ந்துவிண் டாரையக் காமரு கூடலிற் கண்சிவந்த
வேந்துகண் டாயென்ன வெள்வளை சோரக் கலைநெகிழப்
போந்துகண் டாரொடும் போந்துகண் டேற்கவன் பொன்முடிமேற்
போந்துகண் டாளென்று போந்ததென் மாட்டோர் புறனுரையே."

இதே செய்யுளை, யாப்பருங்கலம் தொடையோத்து 53 ஆம் சூத்திர உரையிலும் மேற்கோள் காட்டுகிறார். இச்செய்யுள் இன்ன நூலைச் சேர்ந்தது என்பதை இவர் குறிப்பிடவில்லையா யினும், இது தமிழ் முத்தரையர் கோவையைச் சேர்ந்த செய்யுள் என்று கருதப்படுகிறது.

தமிழ் முத்தரையர் கோவை இப்போது கிடைக்கவில்லை யாகையினால், இது மறைவுற்ற தமிழ் நூல்களின் ஒன்றாகும். இதைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

4. வாசுதேவனார் சிந்தம்

வாசுதேவனார் சிந்தம் என்னும் இந்நூலை இயற்றியவர் குடமூக்கிற் பகவர் என்றும், இஃது ஆரிடச் செய்யுள் (இருடி வாக்கு) என்றும் தெரிகிறது. இந்நூலைப் பற்றியும் இந்நூலா சிரியரைப் பற்றியும் யாப்பருங்கல விருத்தியுரையினால் நாடி

அறிகிறோம். யாப்பருங்கலம் செய்யுளியல் 40-ஆம் சூத்திர விருத்தியுரையில் கீழ்க்கண்டவாறு உரையாசிரியர் எழுதுகிறார்:

"...... ...இதனொடக்கத்துப் பொய்கையார் வாக்கும் குடமூக்கிற் பகவர் செய்த வாசுதேவனார் சிந்தம் முதலாகிய ஒருசார் செய்யுட்களும் எப்பாற்படுமோவெனின், ஆரிடச் செய்யுள் எனப்படும். ஆரிடமென்பது உலகியற் செய்யுட்கோதிய உறுப்புக்களின் மிக்கும் குறைந்தும் கிடப்பன எனக் கொள்க."

குடமூக்கு என்பது கும்பகோணத்தின் பழைய பெயர். அங்கிருந்த பகவர் என்னும் பெரியாரால் இந்நூல் இயற்றப்பட்டது. இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை

5. அறிவுடை நம்பியார் சிந்தம்

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் இந்நூலைக் குறிப்பிடுகிறார். யாப்பருங்கலம், செய்யுளியல் 40-ஆம் சூத்திர விருத்தியுரையில் இவர் எழுதுவது வருமாறு —

"அறிவுடை நம்பியார் செய்த சிந்தம் எப்பாற்படுமோவெனின், தூங்கலோசைத்தாயச் சுரிதகத் தருகு தனிச்சொலின்றித் 'தாழிரும் பிணர்த்தடக்கை' என்னும் வஞ்சிப்பாவே போல வந்தமையாற் றனிச்சொலில்லா வஞ்சிப்பாவென்று வழங்காமோவெனின் வழங்காம், செவியறிவுறூஉவாய் வஞ்சியடியால் வந்து பொருளுறுப்பழிந்தமையால் உறுப்பழிசெய்யுள் எனப்படும், புறநிலை வாழ்த்தும், வாயுறை வாழ்த்தும், அவையடக்கியலும், செவியறிவுறூஉம் எனனும் பொருண்மேற் கலியும் வஞ்சியுமாய் வரப்பெறா என்றாராகலின்."

இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை

6. மூவடி முப்பது

மூவடி முப்பது என்னும் ஒரு நூல் இருந்ததென்பதைப் பேராசிரியர் உரையினால் அறிகிறோம். தொல்காப்பியம், பொருளதிகாரம் செய்யுளியல் 236-ஆம் சூத்திர உரையில் பேராசிரியர் இந்நூலைக் குறிப்பிடுகிறார். அவர் கூறுவது இது:

"மற்று மூவடி முப்பது முதலாயின அம்மையெனப்படுமோ அழகெனப்படுமோவெனின், தாய பனுவலின்மையின் அம்மையெனப்படாவென்பது. இவற்றுள்ளும் ஓரோர் செய்யுட் கண்ணே மாத்திரை முதலாகிய உறுப்பும் ஏற்றவகையான் வருவன அறிந்துகொள்க."[1]

---

1. குறிப்பு: சில ஆண்டுகளுக்குமுன் அச்சாகி வெளிப்போந்த இந்நூல் இப்பொழுது அரிதாயிற்று.

7. கவிமயக்கறை

யாப்பருங்கல விருத்தியுரைகாரர், ஒழிபியலில், "மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுளம" என்னும சூத்திர உரையில் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி, என்னும் நான்கு வகைக் கவிகளைபபற்றி எழுதியபின், "ஒழிந்த விகற்பங்கள் கவிமயக்கறையுளாளும் பிறவற்றுளளுங கண்டுகொள்க" என்று எழுதுகிறார்.

இதனால், கவிமயக்கறை என்னும் ஒரு நூல் இருந்ததென் பதும, இது செய்யுள இலக்கண நூல் எனபதும் தெரிகிறது. இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

8 பெரிய முப்பழம்

யாப்பருங்கலம், ஒழிபியல், "மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுளம்" என்னும் சூத்திர உரையில், பாடுதன் மரபு என்ப தற்கு உரை கூறுகிற விருத்தியுரைகாரர் பெரிய முப்பழம் என்னும் நூலைக் குறிபபிடுகிறார். அவர் எழுதுவது இது:

"பாடுதன் மரபு—என்பது, குலனும் விச்சையும் ஒழுக்க மும பருவமும் என்றிவற்றிற்குத் தக்க வகையாற் பாட்டுடைத் தலைமகனையும அவன் சின்னங்களையுமே பாடுதலும் கிளவிப் பொருளல்லவற்றோடு பாட்டுடைத தலைமகனைப் பெயரும் ஊரும முதலிய உறுப்புகளைச சேர்த்துப் பாடுதலும், தீயன வற்றை அவன் பகைவரைச் சாத்திப் பாடுதலும் என, இரண் டாம. அவையெல்லாம் பெரிய முப்பழம் முதலாயினவற்றுட் கண்டுகொள்க."

இதிலிருந்து பெரிய முப்பழம் என்னும் பெயரையுடைய ஒரு நூல இருநதது என்பதும, அது செய்யுளிலக்கண நூல் எனபதும் தெரிகிறது. இந நூலின் ஆசிரியர் முதலிய செய்திகள் தெரியவில்லை.

9. மாடலம்

இப் பெயரையுடைய நூல் ஒன்றிருந்தது என்பது தக்க யாகப் பரணி உரையினால் தெரிகிறது. மாடலனார் என்பவர் இயற்றிய படியினால் இந் நூலுக்கு இப் பெயர் வாய்த்தது என்று கருதலாம். தக்கயாகப் பரணி, காளிக்குக் கூளி கூறியது 13-ஆம் தாழிசை உரையில், உரையாசிரியர் இந்நூற் செய்யுள் ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். அது :

"கழிநதுவளர் கிழமையி லொழிநத வூழி
யொன்பதிற் றிரட்டி யொருமுறை செல்ல
நன்கென மொழிவன நான்கே—நான்கிலு

முதலது தொடங்கிய நுதல்விழிப் பெரியோன்
கடகக் கஙகணப் படவரவு
பூட்டு மசசிலை வளைத்த பொழுதே
இது, மாடலம்.”

இந் நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

10. பெரிய பம்மம்

பெரிய பம்மம் எனனும் இலக்கண நூல் ஒன்று இருநத தென்பது யாப்பருஙகல விருத்தியுரையினல் தெரிகிறது. எழுத்தோத்து 2-ஆம் சூததிர விருததியுரையில உரையாசிரியர் பெரிய பம்மச் சூத்திரம ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். அது இது :

“உயிருறுப் புயிர்மெய் தனிநிலை யெனுஅக
குறினெடி லளபெடை மூவின மெனுஅ
அஃகிய நாலுயிர் மஃகான் குறுககமோ
டைநது தலையிட்ட ஐயீ ரெழுததும
அசைதொடை நேரசை யாகு முறுப்பென
வசையறு புலவர் வகுததுரைத தனரே
இது, பெரிய பம்மம் ”

இந்தப் பெரிய பம்மததைப்பறறி வேறு செய்திகள தெரிய வில்லை.

11. தக்காணியம்

இந் நூலை யாப்பருங்கல விருததியுரைகாரர குறிப்பிடுகிறார். யாப்பருங்கலம ஒழிபியலில, உரையாசிரியர், “இடைச் சொல் லும் உரிசசொல்லும் தொல்காப்பியம தககாணியம அவிநயம, நல்லாறன் மொழிவரி முதலியவற்றுட காண்க” என்று எழுதுகிறார்.

இதனல், தக்காணியம் என்னும் பெயருள்ள இலக்கண நூல் ஒன்று இருந்ததென்பது தெரிகிறது. இந நூலைப்பற்றி வேறு செய்திகள தெரியவில்லை

12. நல்லாறன் மொழிவரி

இப் பெயருள்ள செய்யுள் இலக்கண நூல் ஒன்று இருந்த தென்பது யாப்பருங்கல விருததியுரையினல் தெரிகிறது. யாப் பருங்கல ஒழிபியலில், “இடைச் சொல்லும் உரிச்சொல்லும் தொல்காப்பியம், தக்காணியம், அவிநயம், நல்லாறன் மொழிவரி முதலியவற்றுட் காண்க.” என்று உரையாசிரியர் எழுதுவதி லிருந்து இதனை அறியலாம். மேலும் இந் நூலிலிருந்து நான்கு சூத்திரங்களை இவ் வுரையாசிரியர் தமது உரையில் மேற்கோள்

காட்டுகிறார். நல்லாறன் என்பதற்கு ஓரிடத்தில் நல்லாதன் என்றும பாடபேதம் காட்டுகிறார். ஆகவே இந் நூலாசிரியர் பெயர் நல்லாறனா அல்லது நல்லாதனா என்பது உறுதியாகக் கூற முடியவில்லை. ஆனால், நல்லாறன் என்னும் பெயரே பல முறை கூறப்படுகிறபடியால் நல்லாறன் என்பதே சரியான பெயர் என்று கொள்ளலாம.

நல்லாறன் மொழிவரி என்னும் இலக்கண நூலிலிருந்து யாப்பருங்கல விருத்தியுரைகாரர் காட்டும் மேற்கோள் சூத்திரங்கள் இவை :—

அ ஆ ஐ ஔ வென்றிவை யெனாஅ
இ ஈ எ ஏ யென்றிவை யெனாஅ
உ ஊ ஒ ஓ வெனறிவை யெனாஅ
த ச ம வ ஞந வெனு மென்றிவை யெனாஅ
முநநா லுயிரு மூவிரு மெய்யுந
தம்முண மயஙகினுந தவறின் றென்ப.

என்றின மாமாறெடுத் தோதினர் நல்லாறனா எனக் கொள்க.
(யாப்பருஙகலம : தொடையோதது உரை மேற்கோள்.)

புறநிலை வாயுறை செவியறி வுறாஉவே
யறநிலை வஞ்சியுங கலியு மாகா
வெணபா வாசிரிய வியலான வருமே
வஞ்சி கலியவற் றியலா வவற்றுள்
இடையிரு செய்யுளும் கைககிளைப் பாட்டும்
கடையெழு சீரிரண் டகவியும் வருமே.

என்றார் நலலாதனார். (நல்லாறனார் எனவும் பாடம்.)
(யாபபருஙகலம செய்யுளியல் 2-ஆம் சூத்திரம் உரை மேற்கோள)

புறநிலை வாயுறை செவியறி வவையடக
கெனவிவை வஞ்சிக் கலியவற் றியலா

என்றார் நல்லாறனா.
(யாபபருங்கலம் செய்யுளியல் 40-ஆம் சூத்திரம் உரை மேற்கோள்.)

உரியசைச சீரப்பி னுகர நேராயத
திரியுந் தளைவகை சோத லானே.

என்றார் நல்லாறனா.
(யாப்பருஙகலம் ஒழிபியல். உரை மேற்கோள்.)

(தொடரும்)

கோசர்

[வித்துவான், ஆ. சிவலிங்கனார், மயிலம்]

(சிலம்பு உஅ : பரல். எ. பக்கம : ௩௩0. தொடர்ச்சி)

(5) கோசம்

'கோசம்' என்ற சொல்லுக்கு, (1) முட்டை (2) உறை (3) பஞ்சகோசம் (4) மதிலுறுப்பு (5) ஆண்குறி (6) கருப்பை (7) பொக்கிஷம (8) பொககிஷசாலை (9) புததகம (10) பட்டா (11) தொகுதி (12) அபிநயத்துககுரிய அலிக்கை வகை (13) சாதிக்காய் (14) வீதி எனப பதினன்கு பொருள்கள் சென்னைப பல்கலைக் கழகத தமிழ் அகராதியில் (Tamil Lexican Vol II. Part I) காணபபடுகின்றன இப் பொருள்களைக் குறிககும் நிலையில் பழைய இலக்கியங்களில் 'கோசம்' என்பது ஆளபபடவில்லை. இப பொருளகளுள் ஒன்றன் அடிப்படையிலும் ஆராய்தற்குப் பொருததம இன்மையால்தான் ஆராய்ச்சியாளர்' அவாகள் இவற்றை விட்டனர்போலும! கொங்கு வேளிர் பெருங கதையில்தான் முதற்கண் 'கோசம்' என்ற சொலலைக் காணகின்றோம.

"காப்பியக் கோசமும் கட்டிலும் பள்ளியும்."

(பெருங. உஞ்சை. 38-167)

என்பது காண்க. "காப்பியக் கோசம்: காப்பியம் எழுதிய புத்தகங்கள், கோசம்: தொகுதியுமாம்" என உரை யெழுதினர் திரு. உ வே. சா. ஐயா அவர்கள். ஷை அகராதியில் 'பொக்கிஷ சாலை' என்ற பொருளுக்கு ஏற்ப மேற்கோளாக, "ஐம் பெருங் குழுவும் அத்தி கோசமும்" (பெரு. வத்தவ. 9. 5.) என்ற பெருஙகதையடி காட்டபபட்டிருக்கின்றது. அவ் விடத்தில் அத்தி கோசம் என்பதற்குப் பொருள அஃதன்று என்பது அதன் உரையால் அறியலாம். "ஐம் பெருங் குழுவினரும அத்திகோசததாரும" என்பது அதன உரை.

(6) கோயமான்

மோகூர்ப் பழையன், மாறன், அதியன், மிஞிலி, அகுதை, திதியன், குறும்பியன், ஆதன் எழினி, தழும்பன், வஞசன், முடியன் ஆகிய இவர்கள் யாவரும் கோசர்கள் என்பர், ஆராய்ச்சியாளர். இவருள் பழையன், ஆதன், எழினி, தழும்பன், மாறன், குறும்பியன் ஆகியவர்களின் பெயர்கள் தமிழ்ச்சொற்கள் என்பதில் ஐயமில்லை. பிறர் பெயர்களும்

வடசொற்கள் என்றும் கூறிவிடுதற்கில்லை இக் கோசர் முன்னோர் வந்த நாட்டினராயினும் காசுமீர நாட்டினராயினும் அவர்களுள் இப் பெயர்களுடையோர் ஒருவரும் இலர் வடவர் மொழிகளில் தமிழ்க்கேயுரிய சிறப்பெழுத்துக்களாகிய 'ழ' 'ற' இல்லாமை யறிக. கோசரைப்பற்றி வரும் இடங்களிலெல்லாம் அவர்கள் வாய்மொழியும், கொடைத்திறனும், வீரமும் கூறப் பட்டனவேயன்றி அவர்கள் பிறமொழியாளர்கள் என்பதற் குரிய ஒரு சிறு குறிப்பும் காணப்பட்டிலது வத்தராயன், வச்சன் என்பனகொண்டு கூறுதல் ஏற்புடைத் தாகாது.

ஆராய்ச்சியாளர் கோசா, வாய்மொழியினர், கொடை யினர், வீரத்தினா என்றெல்லாம் கொண்டு இலக்கியச் சான்றுகளுடன் பழையன் முதலியவர்களையும் கோசர்களே என முடிவுகட்டியதற்கேற்பக் 'கோயமான்' என்பவனும் கோசா வழியினனே என யாம் முடிபு கொண்டுள்ளோம்.

"நிரப்பாது கொடுக்கும் செல்வமு மிலனே
இல்லென மறுக்கும் சிறுமையு மிலனே
இறையுறு விழுமந் தாங்கி யமரகத்து
இரும்பு சுவைக்கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டின் எம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல
யாந்தன் இரக்குங் காலைத் தானெம்
உண்ணா மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே." (புறம் : ௧௮0)

இப்பாடல் ஈர்ந்தூர்க்கிழான் தோயன்மாறனைக் கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனால் பாடப்பட்டது. 'ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன்' என்பதற்குப் பதிலாக, 'ஈர்ந்தூர்கிழான் கோயமான்' என்பதும் பிரதிபேதமாக இருக் கின்றது. 'கோயமான்' என்பதே சிறக்கும் என்னலாம். கோசமான் கோயமான் என்றாகும் எனவே இவனும் கோச மரபினன் என்னலாம். கோசர்க்குக் கூறப்பட்ட சிறப் பியல்புகள் யாவும் இவனும் பெற்றவனாவான். அவைகளை மேற்பாடலில் நன்றாகக் காணலாம்.

"நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே"

"கொடையெதிர்ந்து,
ஈர்நதை யோனே பாண்பசிப் பகைஞன்"

எனவந்த அடிகள் கோசரது "வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பினை" (அகம் : 15) அன்றோ அறிவிக்கின்றன?

"இறையுறு விழுமம் தாஙகி அமரகதது
இரும்புசுவைக கொண்ட விழுப்புண் நோயதீாநது
மருநதுகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிநத யாககையன்"

எனவந்த அடிகள்,

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகததர்
கருஙகட் கோசா" (அகம. 90)

"கடநதடு வாய்வாள் இளம்பல் கோசர்" (மதுரைக்கா: 713)

என்ற அடிகளையும்,

"இறையுறு விழுமம் தாஙகி"

என்றது, கோசரது "நன்றல் காலையும் நட்பிற் கோடாமை யையும்" (அகம் : 113)

"மழையொழுக் கறுஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூர் அவையகம் விளஙக
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன" (மதுரை 507-10)

என்ற அடிகளையும நினைவுபடுத்துகின்றன. "இல்லென மறுக்கும் சிறுமையிலன்" ஆகலின், "எமம உண்ணு மருங்குல் காட்டித் தன்னூர்க் கருங்கைக கொல்லனை யிரக்கும" என்றது,

"ஒன்றுமொழிக கோசர்" (அகம்: 196)

"வாய்மொழி நிலைஇய சேண்விளஙகு நல்லிசை
வளஙகெழு கோசா" (அகம்:113)

என்ற அடிகளை நினைவிற்குக் கொண்டுவருகின்றது.

இவற்றால் 'தோயன் மாறன்' என்றதின் 'கோயமான்' என்ற பிரதிபேதமே சிறக்கும் என்னலாம். ஈர்ந்தூர் கொங்கு நாட்டில் 'ஈஞூர்' என வழங்கும் ஊராகும். கொங்கில் கோசர் வதிந்தனர். எனவே கோயமானும ஒரு கோசன் ஆகலாம்.

(தொடரும்)

வள்ளுவர் காலம்

[திரு. கு. பரமசிவம்]

(சிலம்: உஅ, பரல்: எ, ௩௫௭-ஆம் பக்கத் தொடர்ச்சி)

௩. பொருட்பால்

இனிப் பொருட்பாலைப் பற்றிய இவரது ஆராய்ச்சியை நோககுவோம். பொருட்பால் அர்த்த சாஸ்திரததைப் பின் பற்றியது என்று காட்டுவதே இவரது நோக்கம் என்பது முன்னரே குறிக்கப்பெற்றது. இதனை ஆராயும் முன்னர் அர்த்த சாஸதிரததைப் பற்றியும் அதன ஆசிரியரைபபற்றியும் ஒரு சிறிது அறிவது இன்றியமையாதது.

அர்த்தசாஸ்திரத்தின் ஆசிரியா கௌடில்யர் என்பர். இயற்றியவர் வேறொருவா ஆயினும, இநநூல், சூழ்ச்சியின் மிக்காராக விளங்கியவரும, சந்திரகுப்தரின் அமைச்சராகத் திகழ்ந்தவரும் ஆகிய கௌடில்யர் எனபாரது பெயரால் வழங்கப் பெறறு வருகிறது என்பாரும் உளர்.[1] கௌடில்யருக்கே சாணககியர், விஷ்ணுகுப்தர் எனனும் வேறு பெயர்களும உண்டு. 'கெடில்ய' என்னும சொற்குக் கோணல் (Crookedness) என்பதும் பொய்ம்மை (Falsehood) என்பதும பொருளாகும்.[2] இதனால இந்திய ஆசிரியர்கள் அர்த்த சாஸதிரததை இயறறிய வருககு இபபெயரைக் கொடுகக விருமபாமல் கௌடல்யர் எனனும் பெயரையே வழஙகுகின்றனா. கௌடில்யா காஞ்சி புரததைச் சேர்ந்தவர்; தென்னாட்டு முன்குடுமிப் பார்ப்பனா.[3] இவ்வளவே அர்த்தசாஸதிர ஆசியரைபபற்றி நாம அறியலாகும் கருத்துக்கள்.

இனி, அர்த்தசாஸ்திரத்தில் கூறப்பட்டவற்றைச் சுருக்க மாகப் பார்ப்போம். இநநூல் 15 அதிகரணங்களை உடையது. இவை 150 அத்தியாயங்களாகவும் 6000 சுலோகங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன. நூல் உரைநடையிலேயே எழுதப்பட் டுளளது. ஒரோவழி அததியாயத்தின் இறுதியில் செய்யுள் அமைப்புக்காணப்பெறுகிறது. நூல் பெயருக்கேற்பப் பொருளைப்

---

1. "In my opinion the work has been ascribed to him only because the legendary Canakya or Kautilya who was the best known type of the cunning and unscrupulous minister who accurs frequently both in dramatic and narrative literature,"—M. Winternitz, M.A., ph. D. "Some problems of Indian Literature," pp 108.

2. Ibid pp. 91.

3. Dr. B. Natarajan: "வெள்ளிவிழா மலர்" pp. 294.

பற்றியே பேசுகிறது. அரசன் பொருளைப் பெறும் வழிகளையும் காக்கும் வழிகளையும் கூறுமுகத்தான் உழவு போன்ற பிறவும் பேசப்படுகின்றன. அரசன், அமைச்சன், நாடு, எயில் (Fort) கருவூலம், (Treasury) படை, நட்பு, பகை ஆகிய இவை ஒரு போரசின் உறுப்புக்களாகக் கருதப்படுகின்றன.[1] இவ்வுறுப்புக்களே யன்றிப் புரோகிதனும் அரசியலில் சிறந்த இடம் பெறுகிறான். அரசின உறுப்பாகப் புரோகிதன கூறப்பெற்றானல்லனேனும், அவன், அமைச்சனோடும், இளவரசனோடும் அரசனின் தாயோடும் பட்டத்தரசியோடும் ஒருங்குவைத்து எண்ணப்படுகிறான். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 48000 பணம் சம்பளமாகக் கொடுத்தலவேண்டும் என்று கௌடில்யர் கூறுகிறார்.[2] ஆசிரியன் சொற்படி மாணவன நடத்தல் போலவும், தந்தை சொல்வழி மைந்தன் நிற்றல் போலவும், வீட்டுக்காரன் பணித்தவற்றை வேலைக்காரன் நிறைவேற்றல் போலவும், அரசன் புரோகிதன வழியொழுகுதலவேண்டும்[3] இவ்வாறு அரசியலில் புரோகிதருக்குத் தலைமை கொடுக்கப்பட்டது போன்றே சமுதாயத்திலும் முதலிடம் வழங்கப்பெற்றது. அரசன் அமைக்கும் கோட்டையில அரண்மனையைச் சுற்றிய பகுதியில் அவ்வகுப்பாரே வாழ்தற்குரியராவர்[4] அன்றியும் அவர்களுள் வானப்பிரஸ்தத்தையும் சன்யாசத்தையும் மேற்கொண்டொழுகுவார் வாழ்தற்கென்று அரசன் சில காடுகளை யொதுக்கவேண்டும். அக்காடுகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதனைக் கௌடில்யா நன்கு விளக்குகிறார். பொதுவாக இவ்வகுப்பாருக்கே இறையிலி நிலங்கள வழங்கப்படவேண்டுமென்று கூறியுள்ளார். பிற வகுப்பார் வாழுமிடங்கள் அவரவா வகுப்புக்கேற்றபடி ஒவ்வொரு நகரிலும அமைக்கப்பெறும இவவாறு "பலவிடங்களிலும் அவர் அரசன சமயச் சடங்குகளை இயற்றுதல வேண்டுமென்றும், பாரப்பனர், முனிவர் ஆகியோரைப் புரத்தலேயன்றி அவர் நலனகளையும பாதுகாக்க வேண்டுமென்றும் கூறுகிறார்.

---

1. I. 10 · "The King, the minister, the country, the fort, the treasury, the army, and the friend and the enemy are the elements of sovereignty"-Kautilya's Artha Sastra Translated by Dr. R. Shama Sastry, pp. 287

2. இதனைக கணககிட்டவாகள் ஆண்டுக்கு 48,000 பணம் மிகவும் குறைவென்றும் திஙகளுககே அததொகை யுரியதாகும் என்றும் கூறுகின்றனர்.

3. I. 9: "As a student his teacher, a son his father, and a servant his master, the king shall follow him."—Kautilya's Artha Sastra—Tran. by Dr. R. Shama Sastry—pp. 15.

4. II. 4.

இதனால் அவர் பார்ப்பனீயத்தினை முழுவதும் பின்பற்றுபவர் என்பது தெளிவு[1] "அவர் காணும் சமுதாய அமைப்பும் பாாபபனச சமயததைதயும வழக்கங்களையும அடிப்படையாகக் கொண்டதாகும்"[2] கௌடில்யர் கூறும பொருளாதாரமும் இத் தகையதே[3] அரசியலுக்குப் பொருளை எவ்வெவ வகையில் சேக்கலாம் என்பதனையே அர்ததசாஸதிரம் முழுவதும் கூறு கிறது. சுங்கம, வரிகள் முதலிய பல வழிகள கூறப்படுகின் றன இவையன்றி இவ்வாசிரியா கூறும சில முறைகள் மிகவும வியபபைத் தருவனவாகும. பரத்தைதமை, புலால், கள் முதலி யனவும் அரச வருவாயககுப் பயன்படுத்தப்பட்டன இக்கால மொழியில் சொல்வதாயின், இவையெல்லாம் தேசீய மயமாக்கப பட்டன. பரத்தைதமை பொதுவியல் வேத்தியல் என, இரு பகுதிக ளாகும இரண்டையும கண்காணிக்க ஓா அரசியல் அலுவ லாளா (The Superintendent of Prostitutes) ஏற்படுததப் பட்டார் பரதவைதயர், ஒவ்வொருநாளும தம்மோடு அனறு கலநதவர் யாவர் என்பதனையும், வருவாய் எவ்வளவு என்பதனை யும, அதில் தாம் கைவரபபெற்றது எவ்வளவு பெறவேண்டியது எவ்வளவு எனபதனையும அலுவலாளர் (Superintendent)-க்கு அறிவித்தல்வேண்டும். அவாகள் கூற்றின் உண்மைநிலை உற்று ரால் தெளியபபடும். திங்களதோறும ஒரு குறிப்பிட்ட தொகையை இவாகள் அரசுககுச செலுததவேண்டும். அரச னின் கருவூலம் குனறிய காலகதுத் தம் வருவாய முழுவதை யுமே வழஙகவேணடும். வேத்தியலில் அரசனுககுக் கவரி வீசு தல, நடனததாலும இசையாலும் மகிழ்விததல முதலிய தொழில்களைச் செய்யவும பாததையர் ஏற்படுத்தப்பட்டனா. இவாகள் ஒவவொருவரும் அரசின அடிமையாவர் அரசன் ஏவற்படியே வாழவேண்டும் மறுத்தால அரசன் ஒறுப்பான். ஒறுததல் கசையடியாகவோ காசு வடிவிலோ இருக்கும் ஒருத்தி இறநதால் அவள் இளையளாயின் அவளுடைய தாயும, முதிய ளாயின அவளின் மகளும் அவளது இடத்தைப பெறறே தீர

1. "Kautilya . in many places of the Artha Sastra proves himself to be an orthodox follower of Brahmanism ane often recommends the performance of religious rites and always admonishes the king to protect Brahmans and ascetics and to take due record of their previleges"—Winternitz. "Some problems of Indian Literature" pp. 92.

2. "And the whole Artha Sastra shows that its author was a strict adherent of Brahmanism and that he presupposes a social system entirely founded on Brahmanic religion and customs"—Ibid, pp 104.

3. Dr. B. Natarajan "வெள்ளிவிழா மலர்" pp 298.

வேண்டும். ஒருத்தி தன்னை அடிமைநிலையிலிருந்து மீட்டுக்கொள்ள விழைந்தால் அரசுக்கு 12000 பணம் செலுத்தவேண்டும் இன்னும் பல செய்திகளைக் கௌடில்யர் விளக்குகிறார் இனி கள்: இதுவும் தேசிய மயமாக்கப்பட்டது என்பது முன்னரே குறிக்கப்பெற்றது கள்ளின் பலவகைகளைச் செய்யும் முறையை ஆசிரியர் விரிவாகக் கூறியுள்ளார். பலவகைகளுக்கும் அவற்றைச் செய்யும் முறைகளையொட்டிப் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இம்முறைகளும் பெயர்களும் சங்க இலக்கியங்களில் காணப்பெறும் அப்பகுதிகளோடு பெரிதும் ஒத்துள்ளன என்பது மட்டுமன்று; தமிழ்ப்பெயர்களின் மொழிபெயர்ப்பாகத் தோன்றுகின்றன. அரசியலார் ஒவ்வொரு ஊரிலும் ஒரு கள்ளுக்கடையை ஏற்படுத்துவர் இக்கடைகள் தாம் பலவகையான கள்ளையும் வடிப்பதற்கும், விற்பதற்கும் உரியன. பிறர் அரசியலார் ஒப்புதலின்றி வடிப்பராயின் அவர்களிடமிருந்து தண்டம் பெறப்படும். குறிப்பிட்ட சில விழாக் காலங்களில் சிலருக்கு மட்டும் இவ்வுரிமை (Licence) வழங்கப்பெறும். அவ்வுரிமை பெறுதற்கு ஒரு குறித்த தொகையை அரசியலாருக்குக் கொடுத்தல்வேண்டும். கடைகளுள் அறைளும் இருக்கைகளும் எவ்வாறிருத்தல்வேண்டும் எனபதெல்லாம் கூறப்படுகின்றன ஒவ்வொரு நாளும் எவ்வளவு கள் விற்கப்பட்டது, ஊதியம் எவ்வளவு என்பவற்றை இதற்கென அரசியலாரால் ஏற்படுத்தப்பட்ட கண்காணிப்பாளரிடம் (Superintendent of liquors) கடைக்காரர் அறிவித்தல்வேண்டும்.

இவ்வாறே புலால் விற்பனையும் அரசியலாரால் ஏற்படுத்தப்பட்ட கண்காணிப்பாளருக்கும் (Superintendent of Slough-ter Houses) அவரது பார்வையின்கீழ் நிறுவப்பெற்ற கடைகளுக்குமே உரியது. எவ்வெவ் விலங்குகளைக் கொல்லலாம் எவற்றைக் கொல்லக்கூடாது என்பன விளக்கப்படுகின்றன. கொல்லக் கூடாதென்று விலக்கப்பட்டவற்றைக் கொன்றவனிடமிருந்து குற்றத்தைப் பொறுத்துப் பொருளோ உயிரோ தண்டமாகப் பெறப்படும். கொல்லக்கூடிய விலங்குகளையும் அன்றன்றுதான் கொன்று விற்கவேண்டும். கடைக்கு வெளியே மாண்ட விலங்குகளைக் கடையிற் கொணர்ந்து விற்றல்கூடாது. இவைபோன்ற பல வரன்முறைகள் கூறப்பட்டுள்ளன.

வியப்பைத் தரும் மற்றொரு பகுதி, அரசனின் கருவூலம், வறண்ட காலத்தில் பொருள் ஈட்டும் முறைகளைப்பற்றிக் கௌடில்யர் கூறும் பகுதியாகும். பல முறைகள் கூறப்படுகின்றன. அவற்றுட் சில: ஒற்றர் கூட்டத்தைச் சேர்ந்த

பரத்தை யொருத்தி ஒரு வணிகனின் காதலியாவாள். சில நாட்களில் அவளை ஒரு ஒற்றன் கொலை செய்வான், வணிகன் மீது கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டு அவனது அளவிறந்த செல்வமும்—ஆவியும் பறிக்கப்படும் அல்லது ஒற்றன் ஒருவன் துறவி வேடம்பூண்டு வணிகனொருவனிடம் செலவான். தான் கடவுளருள் பெற்றவன் என்றும காசு ஒனறை இரண்டாக்க வல்லவன் என்றும் கூறுவான். வணிகன் ஆசை மிக்கவனுய்த் தரும சில நாணயங்களை ஒரு கல்லறையருகில் வைத்துப் பூசை செய்வதாகக் கூறுவான். நள்ளிருளில கல்லறையைத் தோண்டி அதனுளளிருககும் சில நாணயஙகளை யெடுத்துக்கொண்டு முனனரே வணிகன் தநதவற்றோடு சேரதது மறுநாட் காலையில் வணிகனிடம கொடுப்பான போலித் துறவியின் ஆற்றலை உண்மையென்று கருதிப் பேராசையால உநதபபட்டு வணிகன் நிறைநத பொருளைக் கொடுபபான். அதைப் பெற்றுக்கொண்டு இரவோடிரவாக மறைந்துவிடுவான பொருள அரசனது கருவூலததை யடையும அலலது மேற்கூறிய முறையிலேயே ஒரு சிறிது மாறுபட்ட முறை பினபற்றபபடும. போலித்துறவி அபபொழுதே மூடப்பட்ட கல்லறையைத தோண்டி முதனுளிர வில் சில நாணயங்களை எடுததுக்கொள்வான் கல்லறையி லிருக்கும குழநதையின் பிணததை ஒற்றர்படையைச் சேர்நத வரைவின்மகள் ஒருததி எடுததுககொளவாள். மறுநாட் காலையில் அவள் வணிகன தன் குழநதையைக் கொன்றதாக முறையிடுவாள அக் குற்றசசாட்டைச் சானருகக்கொண்டு வணிகனது பெருமபொருளும் ஆருயிரும் பறிக்கப்படும். இவவாறு பல முறைகள கூறபபட்டுளளன.

ஒற்றர்களைப்பற்றியும் கௌடில்யர் பலவாறுகக் கூறியுள்ள னர். கள்ளுக்கடைகளிலும் பரததையரில்லங்களிலும ஊருக்குப் புதிதாய் வருவாரைக் குறிதது அறிந்துகொள்ளவும் ஊரின ரையே கண்காணிக்கவும ஒற்றர் ஏற்படுததப்பட்டனர். அரசி யல் அலுவலாளர், அமைச்சா ஆகியோரது போக்கை யறியவும் ஒற்றர் துணைபுரிந்தனா. நன்றியில்லா அமைச்சரை ஒழிக்கக் கூறப்படும் முறைகளும வியப்பைத் தருவனவாகும். பகை நாடுகளை வெல்வதிலும ஒற்றா மிகவும் பயன்பட்டனர். ஒற்றர் போக்கையறிய வேறு ஒற்றர் ஏற்படுத்தப்பட்டனர். முன்னரே குறித்ததுபோன்றும் சிறப்பாக வரைவின் மகளிரும் பொது வாக மகளிரும் ஒற்றுடலுக்குப் பயன்பட்டனர்.

இனிப் போரைப்பற்றிய கௌடில்யரது கருத்தும் பெரிதும் வியப்புக்கு உரியதாகும். பகைவன் தன்னினும வலியனுயிருப் பின் அவனுடன் அமைதியை நாடவேண்டுமென்றும், எளிய

ஞயின் போரையும் மேற்கொள்ள வேண்டுமென்றும கூறியுள்ளார்[1]

உழவுபற்றிய இவரது எண்ணம என்னவோ அதுபற்றிக் கூறுவதற்கில்லை ஆனல் இவர் கூறுவன உழவுத் தொழிலின் வளர்ச்சிக்குத் துணைபுரிவனவாக இலலை அாதத சாஸதிரத்தின் உரைகாரர் இப் பகுதியில் ஒரு பழஞ்செய்யுளை மேற்கோளாகக் காட்டுகிறார். இஃது அக காலத்தவா உழவுக்களிதத சிறப்பை நாம் அறிவதற்கு மிகவும் துணைபுரிவதாகும "நிலம நீர் ஆகிய இரண்டுகுகும அரசனே உரியவன இவவிரண்டும நீங்கலாகப் பிறவற்றின்மீதே மக்கள் உரிமை கொண்டாடலாம்." என்று அச் செய்யுள் கூறுகின்றது[2] கௌடில்யரது போக்கும் ஏறத்தாழ இவ்வாறேயுள்ளது உழவர்க்குரிய பல வரிகளில் நீர்வரியும ஒன்று இவ் வரி அவர்கள் உழவுக்கு நீர் பெறும் முறையை அடிப்படையாகக்கொண்டு விதிக்கபபடுகிறது.

(தொடரும்)

தமிழ் மொழி

[திரு. கி. வேஙகடசாமி]

செம்மைத் தமிழமொழி எஙகள்மொழி !—அது
தெய்வத திருககுறள் தந்தமொழி !
இம்மையில் இன்னிசை பெற்றிடவே—எமக்(கு)
இன்னமு தாகவி னிககுமொழி ! (க)

கன்னித் தமிழ்மொழி எஙகள்மொழி !—அது
காவியம பற்பல கண்டமொழி !
முன்னைப் பரம்பொருள் போன்றுநின்றே—அது
மூப்பிறப் பினறிமு திர்நதமொழி ! (உ)

---

1. "He who is weaker than the other shall make peace, he who is stronger shall wage"—Quoted by Winternitz: "Some Problems of Indian Literature." pp. 107.

2. "Those who are well-versed in the Sastras admit that the King is the owner of both land and water and that the people can exercise their Right of ownership over all other things excepting these two"—ARTTHA SASTRA. II. 24. Tran. by Dr. R. Shama Sastry. pp. 129.

நாடக நலன்

[தென்னாப்பிரிக்கா—டர்பன், திரு ச. மு பிள்ளை அவர்கள்]

'நாடகம' என்ற சொல்லைக் கேட்ட துணையானே சிலர் அருவருப்புக் கொள்ளுவதையும், வேறு சிலர் புறக்கணிப்புச் செய்வதையும, மற்றும சிலர் இழிவாக நினைபபதையும நாம் கண்டும கேட்டும வருகின்றோம் ஆனால், உண்மைவழி நோக்கினால் நாடகம் புறமபழித் தொதுககப்படவேண்டிய சிறுமையுடையதா? அலலது பாராட்டிப போற்றக்கூடிய பெருமையுடையதா? என்பது நன்னெஞ்சுடைய அறிவாளா எல்லோருக்கும் இனிது புலப்படும்.

எணணரிய பிறவிதனில் பெறுதற்கரிய இமமானிடப் பிறவியைப பெற்றதன் பயன் என்னையோவெனின்? அறம் பொருள இன்பமாகிய மூன்றினால் அடையககூடிய இம்மைப் பயன்களை யடைநது, மறுமையில் வீடுபெறுதலைக கூடுமபடி யான முயற்சியை இம்மையிற் செய்தல ஒன்றேயாம அங்ஙனம முயற்சி இமமையிற செய்வதற்கு மக்களுடைய அறியாமை தேயந்து அறிவு விரிந்து விளங்கவேண்டுவது மிகவும இன்றி யமையாத தொன்றாம. அறம பொருள இன்பம வீடாகிய மக்கட் பயனை அடைதற்கு அறிவு பெருகுதல வேண்டுமெனக கூறுவதெற்றுக்கோவெனின், கூறுவம.

உலகத்திலே பெருமை என்றும, சிறுமை என்றும, ஒளி யென்றும, இருள எனறும, உயாவெனறும், தாழ்வெனறும ஒனறனொடொன்று பெரிதும முரண்பட்ட இருநிலைகள இருக்கக காண்கின்றோம் அதுபோலவே பொருளகளுள மெய்ப் பொருள்கள என்றும, பொய்ப்பொருள்சள என்றும் இரண்டு பிரிவுகள் இருக்கின்றன இவைகளுள், பொய்ப்பொருள் இது வெனத தெரிநது அதை ஒழிக்கவும, மெய்ப்பொருள் இது வெனத தெரிநது அதைத தழுவவும நாம முயற்சித்தல் வேண்டும். ஏனெனில், மெய்பபொருள் தெரிநதாலன்றி, நாம் எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சி அவரைத தலைக்கூடுதல் ஒண்ணாது. அஙஙனம் மெய்ப்பொருள் அறிதற்கு அறிவே சிறந்த கருவியாகவிருக்கிறது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (திருக் ௩௫௫)

என்றும்,

"எப்பொருள் யாாயார்வாய்க கேட்பினும் அப்பொருள்
மெய்பபொருள் காணப தறிவு" (திருக் ௪௨௩)

என்றும் ஆசிரியர் திருவள்ளுவனார் இரண்டுமுறை வலியுறுத்திக் கூறியதே மேற்கூறிய உண்மையைப் புலப்படுத்தப் போதிய சான்றாம்.

இனி, அறிவு என்பது ஒவ்வோர் உயிரினிடத்தும் இயற்கையாகவே அமைந்து கிடக்கிறது. ஆனால், பயிரைச் செழுமையாக வளர ஒட்டாமல் களை மூடிக்கொண்டிருத்தல்போல, ஆன்ம அறிவை ஆணவமெனனும் அறியாமை மலம் மூடிக்கொண்டிருக்கின்றது. களையைக் களைந்துவிட்டால் பயிர் செழித்து வளருவதுபோல் ஆன்ம அறிவை மூடிக்கொண்டிருக்கும் அறியாமையாகிய ஆணவமலத்தின் ஆற்றலை அறவே ஒழித்துவிட்டால், இயற்கையாகவே ஆன்மாவினிடம் அமைந்துகிடக்கும் அறிவானது விரிந்து ஒளிரும். அவ்விதம் திகழ்வதே அறிவு பெருகுதல் என்று சொல்லப்படும்.

இனி, அவ்வறிவு திகழுமாறு யாங்ஙனமெனின், ஆன்றோரால் இயற்றப்பட்ட நலம்படு நூல்கள் பலவற்றையும் நுணுகி ஆராய்வதனாலும், பேரறிவுடைய நன்மக்களுடன் அரிய பொருள்களைப்பற்றி அளவளாவி வருவதனாலும் அறிவு விரிந்து திகழுமென்க.

இனி, ஒரு பொருளின் உண்மையைத் தேர்தற்கு மூன்று வகையான அளவைகள் நம்முடைய ஆன்றோர் நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. நூலாராய்வோரும், அறிவு வளர்ச்சியை விரும்புவோரும், உண்மைப்பொருள் தேர அவாவுறுவோரும் அம்மூன்று அளவைகளையும் கைக்கொள்ளவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அம்மூன்று அளவைகளாவன :—(1) உரையளவை (ஆகமப் பிரமாணம்), (2) கருதலளவை (அனுமானப் பிரமாணம்), (3) காண்டலளவை (பிரத்தியட்சப் பிரமாணம்). இவைகளை முறையே நூல் (சுருதி), பொருந்துமாறு (யுக்தி), நுகர்வு (அனுபவ) மெனவும் கூறுவார்கள். இம் மூன்றனுள்ளும் உரையளவை பல நூற்பொருளையும் ஒருங்கறிந்த அறிவாளர்களாலும், கருதலளவை நூலறிவோடு கூடிய இயற்கை நுண்ணறிவுடையோர்களாலும் கொள்ளப்படுவனவேயன்றி, பொதுமக்களால் கொள்ளப்படுவனவாகா. ஏனெனில், பொதுமக்கள் இவ்விரண்டு அளவைகளாலும் பொருள் உறுதிப்பாடு செய்தல் முடியாது. மேலும், இவ்விரு அளவைகளாலும் கொள்ளப்படும் கோட்பாடுகள் ஒருவருடைய கொள்கைக்கும் மற்றொருவருடைய கொள்கைக்கும் மாறுபட்டிருப்பினும் இருக்கலாம். மற்று, காண்டலளவையோ எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாயும், பொதுமக்களுக்கும் புலப்படக் கூடியதாயும் இருப்பதாகும்.

இந்த மூன்று அளவைகளுள் காண்டலளவையே மிகவும் சிறப்புடைத்தென்பது இதனால் புலப்படுகின்றதன்றோ? இவ்வுண்மை உணர்ந்தே நம செந்தமிழ மொழியை முதன்முதல் பாகுபடுத்திய அகத்தியமா முனிவர், இயற்றமிழென்றும, இசைத் தமிழென்றும, நாடகத தமிழென்றும் முப்பிரிவாகத் தமிழைப் பிரித்து இலக்கணஞ் செய்வாராயினார். இம்மூன்றுள் ஒன்றாகிய நாடகத் தமிழின்கட் படுவதாம காண்டலளவை நிற்க, நாடகத தமிழைச் சரியானபடி கற்பதற்குத் தமிழ்மொழியின் இயல்பினை அறிந்துகொள்ள வேண்டுவது மிகவும் இன்றியமையாததாதலால இயற்றமிழை முதலினும், இசைத் தமிழ் நாடகத்தின ஓர் அங்கமாக விருததலால் அதனை இரண்டாவதாகவும கூறிக கடைசியில நாடகத தமிழை உரைததார்

ஆகவே, நாடகம மக்களின் அறிவுவளர்சசிக்குக் கட்டாயம் வேண்டற்பாலதாம என்றும, இதுபற்றியே நாடகத் தமிழ் என்று அகத்தியா தனியாக எடுத்துக்கொண்டு அதறகு இலக்கணஞ் செயவாராயினர் என்றும், நம்மனோரிற சிலர் கருதுகிறபடி நாடகம புறம பழிக்கப்படுவதற்கு உரியதாகாமல எல்லோராலும போற்றக்கூடிய மாட்சிமையுடையதாக இருக்கிறதென்றும ஏறபடுகிறது

இனி, நாடகம எனபதைப்பறறிச சிறிது கூறுவாம். பொருள்கள இருவகைபபடும. அகத்தைச சார்நதுவரும் பொருளெலலாம அகபபொருளெனறும, புறத்தைச சார்நது வரும பொருளெல்லாம புறப்பொருளென்றும் கூறபபடும். மக்களின் அகததே நிகழும நிகழ்ச்சிகளெல்லாம் புறததே ஒவவொருவரின உடலில புலப்பட்டுத தோன்றும இயலபுடையனவாம். இதுபற்றியே,

> "அடுததது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
> கடுததது காட்டு முகம்" (திருக். எ0௬)

என்று ஆசிரியா திருவள்ளுவனாரும் கூறுவாராயினர். அங்ஙனம அகததே நிகழும் நிகழ்சசிக்குத தகப புறத்தே காணப்படும் மெயபபாடுகளை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம, வீரம, உவகை, சினம, சமநிலை என்னும் ஒன்பது சுவைகளும் பொருந்த அவையோர்க்கு நடித்துக்காட்டுதலே நாடகமாம. அஙஙனம் நடிததுக காட்டுதலினாலே மக்களுக்குப் பலவகையான நீதிகள் புலப்படுவதோடு, ஒவ்வொன்றையும நேரில் அப்போது தாம் பாரப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றுவதால் தாங்கள் கண்ட காட்சிகளை அடிக்கடி நினைவுகூர்வார்கள். அவ்விதம் நினைவுகூரும்போதெல்லாம் அந்நாடகத்தால் புலப்பட்ட நீதி

களும் அவர்கள் மனத்தில் உடன் நிகழும். இவ்விதம் அடிக்கடி நிகழுவதால் மக்களின் அறிவு விரிந்து திகழும் அதனால் அவர்கள் நல்லவழியிற் செல்லவும் ஏதுவுண்டாகும் இவ்வுண்மையெல்லாம் உணர்ந்தே தமிழ்முதுமக்கள் பண்டைக் காலத்திலே நாடகமாடுதலை மிகவும் போற்றிவந்தார்கள். இன்னும் வடமொழியில் தலையாய புலவரெனக் கொண்டாடப் படும் காளிதாசர், "சாகுந்தலம்", "குமார சம்பவம்" முதலான நாடகக் காப்பியங்கள் இயற்றியிருப்பதையும், ஆங்கில மொழி விற்பன்னரான சேக்குப்பியர் என்னும் மாகவிஞர் எண்ணிறந்த நாடகங்கள் இயற்றியிருப்பதையும் உலகம் கொண்டாடுகிறதே!

இப்படியெல்லாம் நாடகத்தின் மாட்சியும், பெருமையும் ஒருபுறம் அமைந்து கிடக்க, அதனை இழிவாகவும் அருவருப்பாகவும் மக்கள் கருதக் காரணமென்ன? இக்காலத்திலுள்ள சில போலி நாடக உறுப்புக்கள் நாடக இலக்கணப்படி நாடகம் நடத்தாமல், அவ்விலக்கணத்தினின்றும் வழுவித் தமக்குத் தோன்றியவாறெல்லாம் நடத்துவதன்றோ? இங்ஙனம் இவர்கள் நாடகம் நடத்துவதால் அந்நாடகத்தைக் காணச் செல்லும், அறிவு திருந்தா மக்களைக் காமம், குடி முதலிய படுகுழிகளில் விழச் செய்வதுடன், நாடகத்திற்கே இழிவை உண்டாக்கித், தங்களைப் பிறர் கேவலமாக நினைக்கும்படியாகவுஞ் செய்து கொள்ளுகிறார்கள். நாடகப் புனைவழகு சிறிதும் இன்றிப் புராண இதிகாசத்தில் கூறப்படும் கதை வரலாற்றுக்கு மாறாக எத்தனை நாடகக்காரர்கள் இக்காலத்தில் நாடகம் நடத்தி வருகிறார்கள்! பயனற்றதும், நீதியைப் போதிக்காததுமான நாடகத்தைப் பயனற்ற பாடல்களால் நிரப்பி நடத்திக் காட்டும் நடிகர்களுக்குக் கணக்குண்டோ! இவர்கள் நாடகத்தைச் சென்று பார்த்து எத்தனை இளைஞர்கள் கெட்டலைகின்றனர். இன்னும் எவ்வளவு பேர் கீழ்நிலையிற் போய்க்கொண்டிருக்கிறார்கள்! கற்பினை அணிகலமாகக் கொண்டு வாழவேண்டிய எத்தனை பேதை மகளிர் தங்கள் ஒழுக்கந் தவறி இழிவுப் படுகுழியில் வீழ்ந்தார்கள்! அம்மம்ம! இவ்வளவு கெடுதிகளுக்குங் காரணமென்ன? நாடகக்காரர்கள் ஒழுங்கு தவறி, நாடகம் நடத்துவதல்லவா?

எனவே, நாடக அமைதிப்படி நாடகங்கள் இனியேனும் முறையாக நடைபெற்று, அதனால் நம் மக்கள் நலனடைய வேண்டுமென்று பெரிதும் விரும்புகின்றோம்.

காதலும் கற்பும்

[திரு. மா. ரா. இளங்கோவன்.]

காதல் என்பது உணர்ச்சி கற்பு என்பது ஒழுக்கம். ஒழுக்கம் களவு, கற்பு என இருவகைபபடும. களவில் நட்புக் கொண்ட ஒருவனும் ஒருததியும மணநது வாழும வாழ்வே கற்பாகும கற்பின் இலக்கணததை,

"பொறபமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழவும ஊடலும் ஊட்ட உணாத்தலும்
பிரிவும் பிறவும மருவிய தாகும்." (சூத் · உ00)

என்று நாற்கவிராசர் அகப்பொருள் நூலில் கூறியிருத்தல் காணததககது. தான் விருமபிய ஒருவனை அனறிப் பிற ஆடவனை மனததாலும் நினையாத உறுதியே கற்பாகும. இதனையே வளளுவரும்,

"பெணணிற் பெருநதக்க யாவுள ? கற்பெனும்
திணமைஉண் டாகப் பெறின்." (குறள் · ருச)

என்று கூறியுளளார. கற்பு என்பது ஆண்—பெண் ஆய இரு பாலாககும் உரிய ஒரு பண்பாகும்

காதலும கற்பும எனபவற்றிற்கு விளக்கம் இதுகாறும் கண்ட நாம அடுதது, அவை இலக்கியஙகளில் இடமபெற்ற வகை கண்டு மகிழ்வோம ·

காரைக்காலமமையாா எனப் போற்றப்படும் புனிதவதியார் பரமதத்தனின் மனைவியராய் விளஙகி, இல்லறமென்னும் நல் லறம் நடாத்தினா. அவாகள்தம வாழ்க்கையைப பிளந்தது அற்புதக் கனி ஒனறு ! அமமையாரைத் தெய்வம் என எண்ணிய தததன, அவருடன வாழ்தல தொல்லையானது என்ற முடிபும் கொண்டு வங்கம் சென்றான் அங்கு ஒருத்தியை மணந்து வாழ்நத அவன், தனககுப் பிறந்த மகவிற்குப 'புனிதவதி' என்ற பெய ரிட்டு மகிழ்நதான்.

இதனை யறிநத அம்மையாரின் சுற்றத்தார் அவரைத் தத்தனோடு சோக்கக் கருதி அவனிடம் அழைததுச் சென்றனர். அம்மையாரைக் கண்ட அவன்,

"யானும தருளால் வாழவேன்
இவவிளங குழவிதானும் பான்மையால் உமது நாமம்"

என்று முன் பணிந்து வீழ்ந்தான். அதுகண்ட அம்மையார் உளம் வருந்தி,

"ஈங்கிவன் குறித்த கொள்கை இதுஇனி இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைப்பொதி கழித்திங்கு உன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும் பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டும் என்று பரமனைத் தாள் பரவி நின்றார்."

தன்னைக் கொண்டவனைப் பேணி, அவன் வாழ்வே தம் வாழ்வெனக் கொண்ட அம்மையார், தம் துணைவனே தம்மோடு வாழ எண்ணுந்ததை எண்ணி வருந்துகின்றார். அவருள்ளம் அவன் நலன் ஒன்றையே எண்ணி வாழ்ந்த ஒன்று. அவன் தம்மைப் பிரிந்தது முதலாக, சுற்றத்தார் முயற்சியால் அவனைக் கண்டதுவரை எங்ஙனமேனும் அவனை மகிழ்வித்து வாழ வேண்டும் என்பதே அம்மையார் குறிக்கோளாக இருந்தது. ஆனால், கொண்டவன் வாழ்த்தயங்கும் நேரத்தில் அம்மையாரின் உள்ளம் அவனுக்கென அலங்கரித்து வாழ்ந்த தம நிலையை எண்ணிப் பார்த்தது. எழில் மிக்க தம் உடல் தம்மை ஏற்று உடன்வாழ்ந்து மகிழ்ந்த ஒருவனுக்குத்தான் உரியது என்ற முடிபை அம்மையார் உள்ளம் அறிவித்தது. எனவே தாம், அவர் பேய் வடிவம் வேண்டுகின்றார்.

"இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற தசைபொதி கழித்து இங்கு."

என்ற அம்மையாரின் கூற்று அறிந்து மகிழ்தற்குரிய தொன்றாகும்.

பரமதத்தனுடன் மனைவி என்ற முறையில் வாழ்ந்தபோது அம்மையாரின் உள்ளம் காதலால் கனிந்திருந்தது. காதலில் கடமை உணர்வும், உரிமை உணர்வும் உண்டென்பதை நாம் மறக்கலாகாது. உரிமை உணர்வை அம்மையார் உள்ளத்தில் கொண்டதால்தான், கணவன் அனுப்பிய கனிகள் இரண்டனுள் பசித்து வந்த அடியவர்க்கு ஒன்றீந்தார். இங்ஙனம், காதல் வாழ்வால் மகிழ்ந்த அம்மையார், கணவன் தம்மை மாறாக எண்ணி, "யானும் தருளால் வாழ்வேன்" எனக்கூறும் பொழுது வியப்பில் மூழ்குகின்றார். ஆயினும், தம துணைவன் வேறு ஒருத்தியுடன் வாழ்வது கண்டு அம்மையார் உள்ளம் பொருமவில்லை. அதற்கு மாறாக அவர்கள் எந்நாளும் இன்புற்று வாழவேண்டும் என்று அம்மையார் எண்ணினார்.

அம்மையார் பேய் வடிவம் வேண்டுகின்றார் ஆண்டவனை நோக்கி! தம்மோடு வாழ்ந்தவன் வேறொரு தையலுடன் வாழும் போது அவனுக்கு என வாழ்ந்த தாம், வளர்ந்த தம் அழகு இனி வாழ்வதிலும் வளர்வதிலும் பயனில்லை என்ற எண்ணமே அம்மையாரின் பேய் வடிவ வேண்டுகோளாக இடம் கொண்டது

அம்மையாரின் திண்மை உள்ளம்—காதலுக்கு இடம் அளித்த அவர்கள் உள்ளம் கற்புக்கும் உறைவிடமாய் விளங்கி யதை விளக்குவதே அம்மையாரின பேய்வடிவ விழைவு கற்பு நெறி என்பது இதுதான்! கொண்டானை அன்றிப் பிறிதோர் ஆடவனை மனத்தினும் கருத ஒருபபடாத உறுதி அல்லவா கற்பு என்பது!

மறக்கற்பின் விழுமிய கொழுந்தாய் அன்று விளங்கி இன்றும அழியாது மககளால் போற்றப்படும் கண்ணகி சிலம் பின் செல்வி! அவளிடம் பொறுக்கும் பண்பும் தவறிழைத தோரை ஒறுக்கும பண்பும் வாழ்ந்தன. மணக்காலததின் போது,

"காதலற் பிரியாமற் கவவுககை ஞெகிழாமற் றீதறுக."

என வாழ்ததிக கண்ணகியை மங்கல நல்லமளி ஏற்றினர், அறி வறிந்த பெரியோா. அவர்கள் வாழவு ஆரமப காலததில் சிறந் திருநதது வளமான அவர்கள வாழவினை வளமிழக்கச் செய்தது புகாா நகரில் நடந்த ஆடலரங்கேற்றம! ஆடல், பாடல, அழகு என்ற மூன்றில் ஒன்றும குறைபடாத பெண்ணே மாதவி அவள்பால கோவலன மையல்கொண்டு, மயஙகி விடு தல்அறியா விருபபினனாகித தன் மனையாளையும மறநது அவ ளுடன வாழ்ந்தான்

கோவலன் கண்ணகிக்குக் கொடுமை செய்தான் அவளை மறநது பரததையர் பெண்ணான மாதவியோடு வாழ்ந்தான. தன் முன்னோா ஈட்டிய பொருளனைததும அழிததான் கணவன் மகிழ்வாக மாதவியுடன வாழ்கின்றான என்ற நினைபபு அவ ளுக்கு வருததததையும ஏக்கததையும தராமலிருககவில்லை. அவனுக்கே உரியவளான தன்னை அவனில்லாதபோது அழகு செய்துகொள்ள அவள விருமபவில்லை கணவன்பால் தான் செலுத்தும உண்மை அனபு வீண்போகாது என்பது அவள் நமபிக்கை

அதனால்தான், "கணவனுடன் நீ கூடி வாழக் காமன் கோயிற் குளததில மூழ்கி வா" என உரைதத தன் தோழியான தேவநதிககுக் கண்ணகி, "பீடனறு" எனறு கூறினமை அவள் உள்ள உறுதியைக் காட்டுகின்றது. வினைவலியால் மாதவிபால் வெறுப்புறறு, கண்ணகியை அடைநதான் கோவலன். அடைந்த அவன், கண்ணகியின உடல் மெலிவு, உள்ளச் சோர்வு முதலி யனவற்றைக் குறிபபாலுணாந்து,

"சலம்புணா கொள்கைச சலதியொ டாடிக்
குலநதரு வான்பொருட் குன்றந் தொலைதத
இலம்பாடு நாணுத தருமெனக்கு" (சிலப், கூ; சுகூ-எக)

என்று கூறியபோது, நகைமுகம் காட்டி அவன் வருத்தம் போக்கினாள் கண்ணகி. தன்னை வெறுத்து வேறொருத்தியுடன் வாழ்ந்தவனை அவள் உள்ளம் வெறுக்கவில்லை. "உன் சிலம்பு விற்று, வரும் பொருள் கொண்டே வாழ்வு துவங்கவேண்டும், மதுரை செல்வோம," என்று அவன் உரைத்தபோது அவள் மறுக்கவில்லை; நடுயாமத்துப் போகத்தான் வேண்டுமா என்று கேட்கவும் இல்லை. அவன் மனம் கோணாது நடத்தலே தன் கடன் என எண்ணி வாழ்ந்த காதலரசி அன்றோ அவள!

இங்ஙனம், மென்மையும் பொறுமையும கொண்ட கண்ணகி, கணவன் இறப்பைக் கேட்டபோது வீர உளளம் கொள்கின்றாள். அவள வன்மையின விளக்கமாய்த் தோன்றினாள. கறபு என்னும் உறுதிப பண்பை அவள வடிவம் உணர்த்தியது. அரசவை குறுகிய கண்ணகி, வாயில் காபபவனை,

"அறிவறை போகிய பொறியறு நெஞசத
இறைமுறை பிழைததோன வாயி லோயே!"

என்று விளிக்கின்றாள்.

கண்ணகியின் நிலையைக் காவலனிடம் கூறும் வாயிற் காவலன்,

" . மடக்கொடி
வெறறிவேற் றடககைக கொற்றவை யல்லள்,
அறுவாக் கிளைய நஙகை, யிறைவனை
ஆடல்கண டருளிய அணங்கு, சூருடைக்
கானக முகநத காளி, தாருகன
பேருரங கிழிதத பெண்ணும அல்லள்;
செற்றனள் போலும் செயிற்றனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்."

என்று கூறுகின்றான். அவன் கண்ணகியைக் கொற்றவை, பிடாரி, பத்திரகாளி, காளி ஆகியோர்க்கெல்லாம் ஒப்புமை கூறி, அவர்களையொததவள் அல்ல என்கின்றான் அவர்களி னும் கொடிய தோற்றத்தினளாய் மன்னன்முன் கண்ணகி சென்றாள். அவளின் வடிவம் கண்டு—கற்பின் திண்மை கண்டு மன்னன் வியந்தான்—அச்சம் கொண்டான.

பின்னர், அவளின் வழக்கினையும் செயலையும் கண்ட மன்னன் வெட்கி விழுந்து மாண்டான். தவறிழைதத நெடுஞ் செழியனைத் தனது கற்பின் திறததால் ஒறுத்தாள் கண்ணகி. அவள் அன்றும் வீரபத்தினியாய் விளஙகினாள—இன்றும் தமிழரின் மறக் கற்பின் விழுமிய கொழுநதாய் வாழ்கின்றாள்.

காதலும்கற்பும் கண்ணகிவாழ்வின் சிறந்த இருபண்புகள்!

இராச நாயகம்

[பெருமழை, புலவர். திரு. பொ. வே. சோமசுந்தரனர்]

இராச நாயகம் என்பது செந்தமிழில் இயன்றதொரு தீஞ்சுவைப் பெருங்காப்பியம் என்று தமிழுணர்ந்த அறிஞர்களுக்குக்கூட எடுத்துக் கூறவேண்டி யிருக்கின்றது. இங்ஙனம் ஒரு காவியம் நந்தமிழ் மொழிக்கண் உளதென்பது புலவர்களினும் பலர்க்குத் தெரியாது. தமிழ் வரலாற்று நூல், புலவர் வரலாற்று நூல் முதலிய வரலாற்று நூல்களினும் இவ்விராச நாயகப் பெருங் காப்பியத்தைப்பற்றிய குறிப்புக்களை யான் கண்டதில்லை. இக் காப்பியம் இற்றைக்கு நாற்பது யாண்டுகட்குமுன்னர் அச்சேறி நூல்வடிவில் வெளியிடப்பட்டிருந்தும், சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம்போன்ற சொற்சுவை பொருட்சுவை நிரம்பப் பெற்றதாயிருந்தும், பொதுவாகத் தமிழ்மக்களும், சிறப்பாகப் புலமையாளரும் இதனைப் போற்றிக்கொள்ளாதது எனக்குப் பெருவியப்பையே நல்குகின்றது.

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகட்குமுன்னர் ஒரு கிராமத்தில் திண்ணைப் பள்ளியாசிரியராயிருந்த முதியவர் முதன் முதலாக எனக்கு இராச நாயகத்திலிருந்து ஒருசில செய்யுள்களை இனிய இசையோடே ஓதி அறிவுறுத்தார். அவர் பாடிய பாடல்கள் இயல்பாகவே செய்யுளின்பம் நுகரும் என் உளத்திற்கு அமிழ்தம்போன்று இனித்தன. இத்தகைய செய்யுளாலியன்ற இராச நாயகம் என்னும் அக் காவியத்தைப் பெற்று ஓதி யின்புறக் கருதிய யான், இந்நூல் எங்கே கிடைக்கும்? என்று அக் கிழவரையே வினவினேன். அவர் இந்நூல் இப்பொழுது யாண்டும் கிடைத்திலது; எம்மிடம் ஒரு பழைய (அச்சு) சுவடியுளது; அதைத் தருகின்றேன்; இயலுமேல் தாங்கள் அதைக் கைப்படியாக எழுதிக்கொண்டு அச் சுவடியைத் தந்துவிடுங்கள் என்று கூறி அன்புடன் உதவினர். அந்நூலை யான் முழுதும் எழுதிக்கொண்டு அச்சுச் சுவடியை அவர்க்குக் கொடுத்துவிட்டேன்.

இராச நாயகம் நாற்பத்தெட்டுப் படலங்களில், இரண்டாயிரத்து நானூறு செய்யுள்களடங்கியதொரு பெருநூல். அஃது பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே எழுந்த நூலாகும். அதனை யியற்றிய நல்லிசைப் புலவர் வண்ணக் களஞ்சியப் புலவர் என்னும் சிறப்புப் பெயரானே வழங்கப்பட்டுள்ளார். மகம்மதிய மரபினர்; மதுரை மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர் என்னும் அடைமொழிகளோடே அவர் பெயர் காணப்படுதலால், இவர் மதுரையிலே வாழ்ந்தவர் என்று தெரிகின்றது. அந் நூலின் பாயிரச் செய்யுள் ஒன்று இராச நாயகம் அரங்கேறிய காலத்தை

விளக்கமாகக் கூறுகின்றது. இப் புலவர் பெருமானை ஆதரித்த வள்ளல் எருதை. மகம்மது நயினர் மகனர் அப்துல் காதிர் என்னும் மகமமதிய பெருநிதிக் கிழவர் ஆவர். கம்பநாடா சடைய வள்ளலைத் தம காப்பியத்தே பற்பல செய்யுட்களிலே போற்றிக் கூறுதலபோன்றே, வண்ணக் களஞ்சியப் புலவரும இவ் வளளற் பெருமானை இராச நாயகக் காப்பியததில் பற்பல இடஙகளினும் போற்றிக் கூறியுளளனர்.

இராச நாயகம் பெருமபாலும் கம்பராமாயணததைப் பின் பற்றியே பாடப்பட்டதெனபது அதனை ஓதுவாாககு நன்கு விளஙகும். மேலுமம சிலபபதிகாரம, சீவக சிநதாமணி முதலிய நம் பண்டைய பெருஙகாவியஙகளின் மணம இதன்கண் பயிலு மிடந்தோறும் கமழுகின்றது செய்யுட்கள், பதினெட்டாம நூற்றாண்டின்கட் டோனறிய பிற செய்யுட்களைப்போன்றே எண்மையுடைய சொறகளாலே இயற்றபபட்டுளளன இச் செய்யுட்கள திராட்சாபாகச செய்யுடகள என்னலாம்

இனி, இவ வின்சுவைக் காவியததின இனிமையை யான உணாநது மகிழ்ந்தாங்கு நீஙகளும மகிழும பொருட்டு எடுததுக காட்டாக, முன் எனககு அத திணணைபபளளி ஆசிரியா ஓதிய நான்கு செய்யுளை மட்டுமே கீழே தருகினறேன.

ஓரிடததே ஒரு தலைவன் ஊழ்வலியாலே தன காதலி யைத் தனியிடத்தே காணபபெறறு, அவள எழிலைப பாராட்டி, அவளை 'யார்?' என அறிய முயலும் செவ்வியில் இச் செய் யுட்கள் அமைந்துள்ளன. அவை:

(1) "மனமெனுங கடலில ஓடுமோா காம
வஙகமே! இளைஞாகண மணியே!
புனையிழை மடவாா மகுடமே! எனது
புண்ணியந திரணடபூ ரணமே!
தினமொரு படத்தின ஒட்டினில் லாமல
திருமொழி பேசுமோ வியமே!
வினவு மெபபொழுதும் கருகிவா டாது
மிகுமணந தருமருக கொழுந்தே!

(2) காற்றினில வெயிலில் அடிபடா வளாநது
கணமுத்தம் அரும்பிலாக கருமபே!
மாற்றரு மடவி வரையிடைத் தூஙகா
மஞசததில் தூஙகுசெந தேனே!
ஆற்றொணுத் தழற்செந் தீயடுப் பேற்றி
அடடிடா நவரசப் பாகே!
வேற்றொரு வரினகை புகுநதுநா லதனல
வீக்குறா மெலலிதழ மலரே!

(3) வாயநதமுள் ளடவி தொறு மலையாது
　　மலரணை குலவுவான் மயிலே!
ஏநதவோ ரிசையே பயின்றிடா தனநத
　　இசைபயின றிடுமிளங குயிலே!
ஆய்நதசொற குழறு கிளைஞாகள இதய
　　மாஙகுடம் பையிலுறை கிளியே!
ஏய்நதநால வகைய மலாகளும சுமநத
　　விளஙகெழில வயஙகுபூங கொடியே!

(4) கமமியா உருககும நெருப்பிலை புகுதாக
　　கனகமே! தமரிடா திலஙகித
தமமதி யதனில விலைமதித தெவரும
　　சாறறொணுத தரளமே! புடைதது
விமமிய களப முலைமலை சுமநது
　　விரைகமழ மறைபடா மினனே!
செமமலா மரைவேல கொவவைகள் சுமநத
　　செழுஙகதிாச சீவரெத தினமே!

என்பனவாம். இச் செயயுட்களை அக் கிழவா கூறியபோது யான் அளவிறநத இன்பமடைநதேன். நீங்களும இச செயயுட்களை ஓதியவுடன் என்னைபோனறே மகிழ்கின்றீாகள் என்று நமபுகினறேன இன்பமுடைய செயயுடகளைச் சுட்டிக காட்டலாமலலது, சொலலிககாடட வியலாதென்றுன் இன்ப முணாநத கலைவாணன ஒருவன ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம என்பதுபோன்று, இச செய்யுட்களை ஓதியமாத்திரையானே, இராசநாயகக காபபியததின் சுவை எஙஙனமிருக்கும என்று நீஙகள் ஊகித்துக கொள்வீாகள.

இச் செய்யுட்களை ஓதுமபோதே,

"மாசறு பொன்னே! வலமபுரி முத்தே!
காசறு விரையே! கருமபே! தேனே!
அருமபெறற பாவாய! ஆருயிா மருநதே!
பெருஙகுடி வாணிகன் பெருமடமகளே!
மலையிடைப் பிறவா மணியே எனகோ!
அலையிடைப் பிறவா அமிழதே என்கோ!
யாழிடைப் பிறவா இசையே எனகோ!
தாழிருங கூநதற றையால." (சிலப்-உ· எங-அடு)

என வரும சிலப்பதிகாரததுச் சீரிய அடிகளின் தமிழ்மணம் இவற்றிற கமழ்தலை அறிஞா உணர்வர். மேலும் அப பழைமையோடே திருவருட்பாவை ஒத்த ஓசை நயமும், எண்மையும், இனிமையும, இவற்றின்கண உளவாதலையும உணர்தல கூடும.

இங்ஙனமே அக் காப்பிய முழுதும் இனிமைப் பண்பு நிரம்பிக் கிடக்கின்றது. இதனை இயற்றிய நல்லிசைப் புலவா

உள்ளம், பண்டைச் செந்தமிழின்பம் செறிந்ததொரு கலையுள்ளம என்பதற்கு இன்னும் சான்றுகள் பற்பல உள்ளன அவை நிற்க

இனி, இப பெருங்காப்பியம கதைப போக்காலும், கறபோா உளததைக் கொள்ளைகொள்ளும் தன்மையுடையது. இக் காப்பியத தலைவன் 'சுலையுமானபி' எனனும தோன்றலாவான் தலைவி பல்கீசு எனனும மெலலியல நலலாள. ஈணடுத தமிழப பெருஙகாபபியததே ஒபபற்ற தலைவனும தலைவியுமாகத திகழ்கினற இப பெரு மக்களைப்பறறிய குறிப்புகள் சிலவற்றை யான் பல ஆண்டுகட்குமுனனா "டெயிலிஸ்கெட்ச்" என்னும செயதிததாளில "நாாமன் ஸ்டோனபியன" எனனும அறிஞா வரைநத கட்டுரை ஒனறிற கண்டு அவறறைக் குறிததுவைத்துளளேன் "அபிசீனியா மரபினை ஆக்கிய அரசியா" எனற தலைபபுடைய அக கட்டுரை நமது இராச நாயகக காபபியத் தலைவியாகிய பலகீசு நலலாளைப்பற்றிய சுவைமிக்க வரலாற்றை நனகு விளக்குகின்றது. அக் கட்டுரையின நேரிய மொழிபெயர்ப்பு வருமாறு ·

"வீரமடநதை பல்கீசு வாழககை"

"பள்ளததாக்கை ஏரியாக்கினள"

"பாலைவனத்தை விளைநில மாக்கினள்"

"மணமுடிபபோன 'மாரேப்பு' நகரின் வரலாறு"

இவை அககட்டுரையின் முகப்பின்கண் காணபபடுகின்றன. இனி வருவது கட்டுரை, "சாறு" என்பது ஈமன் என்னும் அரபிய நாட்டின தலைநகரம. அஃது, அரேபியாவின் தென் மேற்குப பகுதியில் உளது. அஙகுள்ள கல்லறைகளில பண்டைககாலததே வரையபபட்ட கையெழுத்துப படிகள் மறைந்து கிடக்கின்றன; அவற்றில் பேரழகி 'பல்கீசு' என்பவளைப் பற்றிக குறிப்பிடப்பட்டிருக்கிறது

இந்நங்கை 'சியா,' 'அபிசீனியா' ஆகிய நாடுகளின் அரசியாவாள. இவ்வரசி வெளளை ஒட்டகத்தில் ஏறிக்கொண்டு ஒட்டகக் கூட்டங்கட்குத் தலைமை தாஙகிச் செல்லும வழககம் உடையவள்.

அவளுடைய ஒட்டகக்கூட்டம வெகுதூரத்திலுள்ள 'ஒபீர்' என்னும் இடத்திலிருந்து, பொன், மணி, தந்தம போன்ற விலைமிக்க பொருள்களை ஆயிரங் கல்களுக்கு அப்பாற்பட்ட செருசலத்திலுள்ள அரசர்பெருமான் சுலையுமானிடத்திற்கு ஏற்றிச் செல்லும. இப்பொருள்கள் அனைததும் தன் காதலனாகிய அம்மன்னனுக்கு அந்நங்கை மனமுவந்து நல்கும் பரிசில்கள் ஆகும்.

அவைகளின் மதிப்பு இரண்டு கோடியே அறு நூறுயிரம் பொன் எனப இததுணைப் பெரும்பொருள்களையும் உலகத்திலேயே பேரறிஞனாகத திகழ்ந்த சுலையுமான் மனனனுக்குப் பரிசிலாகவே அமமாதரசி ஏறறிச்சென்றுள.

ஆயினும், அறிவு மிக்க அவ்வரசா பெருமான், தனது அரசியலின கீழுளள இரண்டு நாடுகளுககு அரசியாயுள்ள அபபல்கீசு நலலாளுக்கு, மேலும் ஒரு நாட்டை நல்கினுனில்லை அவள அன்புப் பரிசுககுக கைமமாருக அமமன்னன் அவளுக்குத் தனனையே வழங்கினுன ; அவள அனபாாநத கணவன் ஆயினுன.

பல்கீசு சுலையுமானுடைய கோனகரததில் அவன் காதலி யாக எததனை யாண்டுகள் உறைநதாள் எனறு தெரியவில்லை. ஆனுல அநநஙகை தன் தலைநகரததிற்கு மீண்டு வநதவுடனேயே சுலையுமானின மகனை "மெனிலிகு" என்பானை ஈனறுள். இம மெனிலிக்கே இபபொழுது அபிசீனிய மனனராக விளங்கும 'கெயலிசிலாசின்' மரபிறகு முதலவா ஆவா

பலகீசு 'ரார்கெயில' எனபவரின் மகளாவாள் இவள் 'மாரெப்' என்னும் நகரததே பிறந்தவள மாரெப் எனபது சபேயிய பேரரசின் தலைநகரமாகும பல்கீசுவின் அன்னை "எட்டியே அசீபு" எனப்படுவாள இவள் அபிசீனிய இளவரசி களில ஒருததியாவள்.

பலகீசு தன் குழந்தைப் பருவததை அபிசீனியாவிலேயே கழிதது வந்தாள. அவள தந்தை இறப்பதற்குச் சிறிது காலத் திற்கு முன்புதான் மாரெப் நகரததை எய்தினுள

பல்கீசின் தாய் தன் சாவை நெருங்கிய பொழுதுதான் தனக்குப பினனர் அரியணையேறும உரிமையைப பல்கீசுவிற்கு வழங்கினுள். ஆனுல, அநநாட்டு அரசியல் விதி அவ்வுரிமையை உறுதிபபடுததாது , எறறுலெனின் அந்நாட்டுக குடிகளும அவளை அரசியாக ஒப்புதலவேண்டும். ஒபபினுற்றுன் அவள அரசுகட்டிலேறலாம்.

அரசுகட்டிலேற முன்வருவோர் ஒன்பது வகையான சிறப்புக்களை உடையராதல்வேணடும என்பது, அக்காலத்தே அந்நாட்டின் அரசியல் விதியாம். அவற்றுள்ளும், உடல்நலனும், உளத்திண்மையும ஆத்மீக உணாச்சியும் தலைசிறந்தனவாகக கருதபபட்டன. சியா நகரததிற்கு, அரசியாக வரும் பல்கீசு ஒரு நொண்டிப பெண்.

பொதுமக்களாலும அவளே அரசியாகத் தேர்நதெடுக்கப் பட்டாள். அவள் அரசுகட்டிலேறியவுடன் ஞாதியொருவன் அச்சமிக்க பெருங்கலாம் ஒன்றனைத் தொடஙகினுன். அக்

கிளர்ச்சி பெருங்கேடு விளைவிப்பதாயிருந்தது. பல்கீசு முதன் முதலாக அதனை அடக்கவேண்டியவளாயினள்.

அக்கலகத்தை அடக்குதற்கு அவள் காட்டிய வீரமும், தறுகண்மையும் அவளுடைய புகழை வளர்த்தன. "பார்த்தாற் பசு, பாய்ந்தாற் புலி," என்று அவளை அந்நாட்டினர் எல்லாம் புகழ்ந்தனர்.

அவளது மறத்தன்மை இங்ஙனமிருப்பினும், பல்கீசு ஒரு புதுமைப் பெண்ணாகவுந் திகழ்ந்தாள். அவள் தனக்கு முன்னும் பின்னுமாகிய எல்லாக்காலத்தும் வாழ்ந்த மகளிர்கள் அனைவரினும் மிக்க வனப்புடையள் ஆவாள் எக்காலத்தும் காணப்படாத பேரெழிலே அவள் பெருஞ்செல்வமாக விளங்கிற்று. அவள் பூங்கொடியை ஒத்தவள்; பொன்மேனியுடையவள்; சித்திரப்பாவையினுஞ் சிறப்புடையள், கயற்கண்ணாள், அமிழ்தத் தீங்கிளவியாள்

இன்று மறைந்து கிடக்கும் தலைநகரமாகிய 'மாரெப்' கடல் மட்டத்திற்கு ஏழாயிரம் அடியுயரமுள்ள மலைகளின்மேல் அமைக்கப்பட்டிருந்தது அந்நகரம் சிறிய தொன்றாகவே இருந்திருக்கக்கூடும் எனினும், அரண்மனை பொன்னாலும், மணியாலும் "பிரமிட்" உருவத்தில் கட்டப்பட்டிருந்தது.

"மேயோரிசு" என்னும் ஏரியின் அழகிய கரையின்கண் இவ்வரண்மனை அமைந்திருந்தது. காண்போர் கண்கவரும் தோற்றத்துடன் அது நிவந்து நின்றது அந்த ஏரி ஒரு செயற்கை ஏரி, ஒரு பள்ள நிலத்தை இருமருங்கும் கரைகோலி யதன் வாயிலாய் அவ்வேரி அமைக்கப்பட்டதாம்

புகழ் மிக்க இம் மாரெப் அரசி பல்கீசு பண்டையுலகப் புதுமையில் ஒன்றாக விளங்கினாள். இவள் குன்றுகளை ஆழ்ந்த ஏரிகளாகவும், மயோரிப் பள்ளத்தாக்கை ஏரிகளாகவும் மாற்றினாள் அவ்வேரிகளினின்றும் கால்வாய்கள் அமைத்து மருங்குள்ள நிலப்பரப்பை எல்லாம் வளம்படுத்தினாள். இவள் இது செய்திலளேல் அப்பகுதியெல்லாம் பாலை நிலமாகவே கிடந்திருக்கும்.

அக்கால்வாயின் அணை மிகப்பெரிது. அதைச் சுமந்து நிற்கும் தூண்களுக்குச் சாந்தாக, வெள்ளியும், வெள்ளீயமும் பயன்படுத்தப்பட்டன. நானூறு யாண்டுகளுக்கு முன்னிருந்த மாரெப் நகர அராபியர்கள், அந்நீர்நிலையைப் பேணும் மதுகையிலராய் அணைக்கட்டின் பூட்டுகள் சீர்கெடெய்தும்படி விட்டுவிட்டனர்.

(தொடரும்)



ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் (கி பி 1854) வடஆற்காடு மாவட்டத்தின் நிலப்படம்

செய்திகளும் குறிப்புக்களும்

மலேயாத் தமிழர்கள் நாட்டுப் பற்று

தெனகுமரி வடபெருஙகல் என, ஆசிரியா குறுஙகோழியூர்கிழா ரால் வரையறுததுரைககப்பட்ட நம தமிழக நிலவெல்லே, தொல் காப்பியா காலத்தில் வடவேஙகடம்வரை வடவெல்லேயாகக குறுகியது. இப்போது திருததணிக்குஙகூடப போராட வேண்டிய நிலேயில தமிழக எல்லே சுருககம பெற்றுள்ளது.

சித்தூா திருததணி திருக்காளததி வடவேஙகடம் முதலியவற்றை ஏறககுறைய 40 ஆண்டுககு முனனா, தம் ஆட்சிமுறைக கொள்கைக் கேறப ஆநதிரப் பகுதியோடு ஆஙகில அரசினா இணேததனா. ஆனல் தமிழகததையே அவை சோநதன எனபதறகு இலக்கியஙகளும், வரலாறுகளும, கலவெட்டு, செப்பேடு, பழககவழககம முதலியனவும் மெய்ப்படுததுகின்றன. அவவாறிருபப இன்னும ஆநதிரததோடு இணேததுவைததிருப்பது அரசியலாரின நடுநிலே பிறழந்ததன்மையே ஆகும

இவவுண்மைகளே மலேயாவில வாழ நம தமிழமககள் நன்குணர்ந்து ஓர் அறிககை விடுததுள்ளனா. அவவறிககையோடு ஆஙகில அரசினர் காலததில ஆநதிரததோடு தமிழக ஊர்களே இணேப்பதற்குமுன இருந்த நிலவரைப்படம ஒனறினேயும இயைதது அனுப்பியிருககின்றனா. அவ வறிககை, தமிழகததில வாழும அறிவறிநத பெருமககட்கும மககள தலேவா, மாநில அமைசசா, சென்னே மாநில முதலமைசசா, சட்டஅவை உறுப்பினா, நாள் திஙகள் கிழமை இதழாசிரியா முதலிய பல்லோர்க்கும் வழஙகி யாவரும் தமிழக எல்லேப் போராட்டததைத துவஙகி நிகழததுமாறும தாம யாவரும அதிற் பஙகெடுததுக்கொள்ள முன் வருவதாகவும அறிவிதது வேணடுகின்றனர் அந நிலப்படததை இதனேடு இணேதது வெளியிட்டுள்ளோம்.

குறிப்பு: மலேயாவாழ தமிழாகள, இடஞ்சிறிதெனனும ஊக்கந் துரப்ப ஒடுஙகா உள்ளததராய மடிதற்று முன்வருவதறிநது இறும்பூதும், இன்பும கொள்கினறேம்.

நம் தமிழ மககள் தம தமிழநாட்டு ஊர்களேக கொடாமை வல்ல ராய்ப் போரைத துவஙகிப் பொற்கோட்டிமயப் பொருவறு பததினிக் குக கற்கொணர்ந்து, கனக விசயா தம் முடிததலே நெரித்தவன் வழி யினா தமிழர், வீர வென்றியா எனபதை உலகுணரச செயவாரகளென நம்புகின்றேம்

பச்சையப்பன் கல்லூரி மாணவர் தமிழ்க் கழகம்

மேற்படி கழகச சார்பில் 19-2-'54-ல் மாலே 5-30 மணிக்கு, திரு. மா. இராதாகிருட்டிண பிள்ளே தலேமையின்கீழ ஒரு கூட்டம் கூடியது. அதுகாலே, திரு. அ. சிதம்பரநாதச செட்டியார், திரு சு. செஙகல்வராய பிள்ளே, திரு. இரா. நெடுஞ்செழியன ஆகியவாகள முறையே, திரு. கா. சுப்பிரமணிய பிள்ளே, திரு. சி. மு. சுப்பிரமணிய பிள்ளே, திரு. பாரதிதாசன் ஆகியவர்களின் திருவுருவப் படஙகளேத் திறந்து வைத் தனா. அவ்வவர்தம் சிறப்பியல்புகளேயும குறித்து விரிவுரை நிகழத் தினா. 'வாழிய செந்தமிழ' என்னும் பாடலோடு இனிது முடிநதது.

குறிப்பு: தமிழ்நாட்டுப் புலவர், அறிஞர்களின் படங்களைத் திறந்து வைத்தலும் பாராட்டெடுத்தலும் நாட்டுக்கும் மொழிக்கும் செய்யும் அருந்தொண்டாகும்.

திருக்குறள் விளக்கச் சொற்பொழிவுகள்

மாம்பாக்கம் குருகுலத் தலைவர் திரு இளவழகனார் அவர்களால் திருக்குறளின் ஒன்பது இயல்களின் உட்கிடக்கைகளை 19-3-54 முதல் 27-3-54 வரை ஒன்பது நாட்களிலும் விரிவுரையாக நிகழ்த்தி உண்மை கூறப்பட்டது. 28-3-54-ஆம் நாள் சென்னை பூக்கடை மல்லீசுரர் திருக்கோவில் மண்டபத்தில் பல அறிஞர் சொற்பொழிவு நிகழ்த்த இனிது முடிவுற்றது.

திருக்குறள் ஆங்கில உரையாசிரியருக்குப் பாராட்டு

திருக்குறட் பெருநூலுக்கு ஆங்கிலத்தில் விளக்கவுரை யெழுதி வெளியிட்டுள்ள திரு. ஏ. சக்கரவர்த்தி நயினார் அவர்கட்கு 28-3-54 மாலை 4 மணிக்கு சென்னை தங்கசாலைத் தெரு செயின் மண்டபத்தில் கல்வியமைச்சர் திரு சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் துவங்கிற்று. அதுகாலை, பேராசிரியர், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், திரு கி. வா. செகந்நாதன் முதலியோர் பாராட்டிப் பேசினர். அப்பால் மாலை 6 மணிக்கு விழா முடிந்தது.

குறிப்பு: திருக்குறளுக்கு அணிசெய்யும் உரைகள் பல. புதுவதாக ஆங்கிலத்தில் உரை வருவதுகண்டு பேருவகை யெய்துகின்றோம்.

பூனா பல்கலைக் கழகத்தின் தாய்மொழிப் பற்று

கடந்த 3-4-54-ல் கூடிய பூனா பல்கலைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தினர், மருத்துவத் துறையிலும், பொறியியல் துறையிலும் பாடங்களை இந்தி மொழியிலேயே கற்பிக்க வேண்டும் என்று பம்பாய் அரசினர் ஆணையிட்டிருப்பது பல்கலைக் கழக மாணவர்க்கு ஊறு பயப்பதாகும் என்றும், மராத்திய மொழி வளர்ச்சிக்கு இடர் செய்வதாகும் என்றும் தம் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் பம்பாயக் கல்வி அமைச்சர் இந்தியே பயிற்சி மொழியாக வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருந்தார். அதனைக் கண்டிக்கவே இக்கூட்டம் கூடிற்று. கூட்டத்தினர் தாய்மொழியிலேயே பாடங்களைப் பயிற்றுவிக்க வேண்டிய இன்றியமையாமையினையும், அயல் மொழியால் விளையும் தீமைகளையும் பற்றிப் பேசினர்.

அடுத்துவரும் 1956-57-ம் ஆண்டுகளில் கல்லூரி முதல் வகுப்புக்களில் கலை, விஞ்ஞானம், வாணிகம் முதலிய தேர்வுகளில் விடை எழுதும் மாணவர்கள் மராத்தியிலேயே எழுதுவதற்கான திட்டமொன்றும் தீட்டப்பட்டது. இதுபற்றி ஆய்ந்து முடிவுகாண ஒரு குழுவும் அமைக்கப்பட்டது. இதனை நம் தமிழகம் பின்பற்றுமா?

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

பெண்ணாகடம் ஆட்சிமொழி மாநாட்டுப் பந்தல்

பெண்ணாகடம் ஆட்சிமொழி மாநாட்டிற்கு வந்திருந்த பெருமக்கள்



உட்கார்ந்து இருப்பவர் (இடமிருநது வலம) 1 மாநாட்டுப் பொருளாளா, திரு குஞசிதபாதம் பிள்ளை, 2. பனமொழிப்புலவர், திரு கா அப்பாததுரை, எம ஏ , எலடி; 3 மாநாட்டுத தலைவா, திரு ஆ கசபதி நாயகா, பி ஏ , பி எல், 4 திரு கி ஆ பெ விசுவநாதம், 5 மாநாட்டு வரவேறபுத தலைவா, திரு சிவ பழமலை